*Ealuvi*

# தரம் 5 மாணவர்களின் கற்றலுக்கு கைக்கொடுப்போம்

## தாய்மொழி (தமிழ்), கணிதம் மற்றும் சுற்றாடல் சார் செயற்பாடுகள்

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சுமார் 150 புள்ளிகள் பெறுவார்கள் என எதிர்ப்பார்க்கும் மாணவர்களின் புள்ளிகளை மேலும் அதிகரிப்பதற்கான ஆசிரியர் வழிகாட்டி கைந்நூல்.


தயாரிப்பு :-


நுவரெலியா வலய கல்விக் காரியாலயம்


ஆரம்பக்கல்விப் பிரிவு.

### படம் பார்த்து வாக்கியங்கள் அமைத்தல்

- **செயலொழுங்கு**

  - மாணவக் குழுக்களுக்கு குழு ஒன்றிற்கு ஒரு ஒளிபடம் அல்லது காட்சிப்படம் வீதம் வழங்குதல்.







  - மாணவக் குழுக்களை அக் காட்சிப் படத்தினை நன்கு அவதானிக்க விடல்.
  - பின்னர் கண்களை மூடி பார்த்த காட்சியை மனக்கண் முன் கொண்டு வரல்.
  - பின்னர் அந்த காட்சிப்படத்தை பார்த்து குழுக்கள் கலந்துரையாடி வாக்கியங்களை அமைத்து காட்சிப்படுத்தி அதனை வாசித்தல்.

**காட்சிப் படங்களைப் பார்த்து வாக்கியங்களை எழுதுவோம்.**



01. ……………………………………………………………………………………………
02. ……………………………………………………………………………………………
03. ……………………………………………………………………………………………

## பந்தி, பாடல், கிரகித்தல் பயிற்சிகள்

அழகை அனைவரும் விரும்புகின்றோம் நாம் வாழும் வீடு அழகாக இருக்க வேண்டும். அழகுக்கு மேலும் அழகு தருவது தொட்டிகளில் வளர்க்கப்படும் வண்ண வண்ண மீன்களே! சுறுசுறுப்பாக நீதிச் செல்லும் மீன்கள் வற்றாத மகிழ்ச்சியை எமக்குத் தருகின்றன. அலங்கார மீன்களை வளர்ப்பது எமது உடல் நலத்திற்கு நல்லது எனக் கூறுவர். இவற்றைப் பார்த்து மகிழ்வதால் மன அழுத்தம் குறைகிறது. இரத்த அழுத்தம் உடையவர்களுக்கு அது குறைவதாகக் கண்டறிந்துள்ளனர். எனவே நாமும் அழகிய மீன்களைத் தொட்டிகளில் வளர்த்துப் பயன் பெறுவோம்.

**வினாக்கள்**

1. நாம் வாழும் வீடு எப்படி இருக்க வேண்டும்?

………………………………………………………………………..

2. அலங்கார மீன்களைப் பார்த்து மகிழ்வதால் எது குறைகிறது?

……………………………………………………………………….

3. ‘‘மெய்’’ என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

……………………………………………………………………….

4. ‘‘சோம்பலாக’’ என்பதற்கு எதிர்க் கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.

………………………………………………………………………..

5. விசிறியும் சுழியும் கொண்ட எழுத்தையுடைய சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக

………………………………………………………………………

6. பந்தியில் குறிப்பிடப்படும் அடுக்குத் தொடரை எழுதுக.

………………………………………………………………………

பாதையில் நாமும் போகையிலே
பார்த்துக் கவனமாய் சென்றிடுவோம்
வீதியொழுங்கைப் பேணி நிதம்
விபத்திலிருந்து காத்திடுவோம்

கவனம் எங்கும் சிதறாமல்
பாதையின் வலதுபுறம் நடந்திடுவோம்
வெள்ளைக் கோட்டைக் கவனிப்போம்
முறையாய்ப் பாதையைக் கடந்திடுவோம்

1. விபத்திலிருந்து காத்திட நாம் என்ன செய்ய வேண்டும்?
…………………………………………………………….
2. பாடலிலுள்ள ஒத்த இரு சொற்களும் எவை?
…………………………………………………………….
3. பாடலிலுள்ள பெயர் அடைமொழி ஒன்று தருக
……………………………………………………………
4. ‘‘வீதியொழுங்கை’’ எனும் சொல்லினை பிரித்து எழுதுக.
……………………………………………………………
5. கவனயீனம் எனும் சொல்லின் எதிர் கருத்துச் சொல்லை எழுதுக
…………………………………………………………….
6. பாடலிலுள்ள வினையெச்ச சொல்லொன்றை எழுதுக.
…………………………………………………………..

**செயலொழுங்கு**

- பாடல் அல்லது பந்தியினை பிரதியெடுத்து மாணவக் குழுக்களுக்கு வழங்குக.
- அதனை கிரகித்து வாசிக்க வழிப்படுத்துக
- பாடல் அல்லது பந்திக்கான வினா அட்டைகளை கூடைக்குள் இட்டு வைக்க வழிப்படுத்துங்கள்
- குழுவிலுள்ள மாணவர் வினா அட்டையை எழுமாறாக எடுத்து கரும்பலகையில் ஒட்டி காட்சிப்படுத்த வழப்படுத்தங்கள்
- ஏனைய மாணவ குழுக்கள் அவ் வினாவிற்கான விடைகளை பந்தியில் அல்லது பாடலில் இருந்து கூற வழிப்படுத்துக
- கூடுதலாக விடையளித்த குழுக்களுக்கு பாராட்டுக்களை வழங்குக.

## மரபுத் தொடர்கள்

- கீழ்வரும் மரபுத் தொடருக்கான கருத்துக்களை எழுதுக.

1. கண்திறத்தல் -
2. கதைவளர்த்தல் -
3. தலைகவிழ்தல் -
4. தட்டிக்கொடுத்தல் -
5. நட்டாற்றில்விடல் -

**செயலொழுங்கு**

- மாணவ குழுக்களுக்கு மரபுச்சொற்களும் கருத்துக்களும் அடங்கிய டொமினோ அட்டைகளை வழங்குக
- அவ் டொமினோ அட்டைகளை பொருத்தமாக இணைப்பதற்கு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குக
- பூர்த்தி செய்த குழுவுக்கு பாராட்டுக்களை வழங்குக

| | |
|---|---|
| கண்திறத்தல் | ஆபத்தில் கைவிடல் |
| நட்டாற்றில்விடல் | வெட்கமடைதல் |
| தலைகவிழ்தல் | பேச்சை வளர்த்தல் |
| கதைவளர்த்தல் | உற்சாகப்படுத்தல் |
| தட்டிக்கொடுத்தல் | அறிவுண்டாதல் |

- 12 அட்டைகள் வருமாறு தயாரித்துக் கொள்க.

## பழமொழிகள்

- கீழ்வரும் பழமொழிகளுக்கான கருத்துக்களை எழுதுக

1. ஆழமறியாமல் காலை விடாதே

……………………………………………………………

2. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்

……………………………………………………………

3. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

……………………………………………………………

4. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

……………………………………………………………

5. சிறுதுரும்பும் பல் குத்த உதவும்

……………………………………………………………

**செயலொழுங்கு**

- மாணவ குழுக்களுக்கு பழமொழி அட்டைகளை வழங்குக
- வெவ்வேறு பழமொழியும் அதன் கருத்துக்களும் அடங்கிய அட்டைகளை வகுப்பறையில் ஆங்காங்கே ஒட்ட வழிப்படுத்துக
- குழுவுக்கு வழங்கப்பட்ட பழமொழியின் கருத்தை தேடி கண்டுப்பிடித்தப் பின் அதன் கீழ் உள்ள பழமொழியின் கருத்தை தேடி செயற்பாட்டை பூர்த்தி செய்ய வழிப்படுத்தக

உ+ம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டவை

| |
|---|
| சிறுதுரும்பும் பல் குத்த உதவும் |

வகுப்பறையில் ஒட்டப்பட்டவை

| |
|---|
| சிறு பொருளையும் பாதுகாத்தல் வேண்டும் |

## இளமைப் பெயர்கள்


- கீழ்வரும் சொற்களுக்கான இளமைப்பெயர்களை எழுதுக.

1. அணில்
2. ஆடு
3. நெல்
4. கீரி
5. எலுமிச்சை
6. தவளை
7. கோழி
8. பாம்பு
9. மா
10. பலா

**செயலொழுங்கு**

- தாயக்கட்டைகளில் ஆறு முகங்களில் 6 சொற்களை எழுதிக் கொள்ளுங்கள்
- மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப வகைப்படுத்தல் வேண்டும்

- சொற்களுக்கான இளமைப்பெயர் அடங்கிய சொல்லட்டைகளை காகித தட்டுக்களில் தயார்ப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள்
- தாயக்கட்டையை உருட்டியவுடன் திட்டத்தில் உள்ள சொல்லின் இளமைப்பெயரை காகித தட்டில் இருந்து எடுத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்





**ஒலிமரபுச் சொற்கள்**


- பின்வரும் பிராணிகளுக்கான தொனிமரபுச் சொற்களை எழுதுக

| | | | |
|---|---|---|---|
| 1. சிங்கம் | 2. தேனீ | 3. குருவி | 4. அணில் |
| 5. ஆடு | 6. புறா | 7. கரடி | 8. நாய் |
| 9. நரி | 10. வண்டு | | |

**செயலொழுங்கு**

- இப் பிராணிகள் அடங்கிய சொல்லட்டைகளை கரும்பலகையில் காட்சிப்படுத்துக
- ஒவ்வொரு பிராணிகளதும் தொனிமரபுகளை ஆசிரிய மேசையில் காட்சிப்படுத்துதல்.
- மாணவ குழுக்களில் ஒருவரை எழுமாறாக அழைத்து அப்பிராணிகள் அடங்கிய சொல்லட்டைகளுக்கு பொருத்தமான தொனிமரபு சொல்லட்டைகளை தெரிவு செய்து கரும்பலகையில் ஒட்ட வழிப்படுத்துதல்.
- அதனை அனைத்து மாணவர்களிடமும் எழுத வழிப்படுத்துதல்.




**…க்கான ஒருமொழி**

- பின்வருவனவற்றின் தொடர்மொழிக்கான ஒரு மொழியை எழுதுக

1. ஒரே சமயத்தில் 8 விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்.

   ……………………….

2. பகையரசருக்கு கொடுக்கப்படும் நிறைப்பொருள்

…………………………

3. அறிஞர்கள் வாதிடும் களம்

………………………

4. எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன்.

…………………………

5. ஒன்று போல் இருக்கும் மற்றொன்று

…………………………

6. ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து

………………………

7. ஒரு நூலை வெளியிடுவோர் அந்நூலை பற்றி கூறும் உரை.

………………………

8. நூலாசிரியர் ஒருவர் தாம் இயற்றிய நூலின் முன்னே தனது நூலை பற்றி கூறும் உரை

………………………

9. 50வது ஆண்டின் இறுதியல் எடுக்கப்படும் விழா

………………………


10. 10 ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி.

…………………………

**செயலொழுங்கு**

- சுழலும் சக்கரம் ஒன்றில் தொடர்மொழிக்கான ஒரு மொழியை சரியாக பிரித்து எழுதிக் கொள்ளுதல்
- மாணவ குழுக்களை அழைத்து சக்கரத்தை சுழற்றுமாறுக் கூறுதல்
- சக்கரம் நிற்கும் அம்புக்குறியின் அருகிலே உள்ள சொல்லை வாசித்து அதன் தொடர்மொழியை கூறச்செய்தல்.

எடுத்துக்காட்டு




எதிர்கால நிகழ்ச்சிகளை படைக்கும் ஆற்றல் படைத்தவன்.

**பிரித்தெழுதுக.**

கீழே தரப்பட்டுள்ள சொற்களை பிரித்தெழுதுக.

1. தேங்காய்
2. காட்டரசன்
3. பூங்கொடி
4. மட்குடம்
5. மரவேர்
6. பனங்காய்
7. வெற்றிலை
8. தேங்குழல்.
9. தேநீர்.
10. தேனீர்.

**செயலொழுங்கு**

- மாணவர்களை வட்டமாக நிறுத்திப பந்து ஒன்றினை வழங்குதல்.
- ஒலிப்பதிவினூடாக இசையை ஒலிக்கச் செய்து பந்தை பரிமாற விடல் இசையை நிறுத்தியவுடன் பந்தை கையில் வைத்திருக்கும் மாணவரிடம் சொல்லட்டை ஒன்றை எடுக்கச் செய்து அச்சொல்லினை பிரித்து கூறுமாறு கூறுதல்.
- அதனை அப்பியாசக் கொப்பியில் எழுதிக் கொள்ளச் செய்தல்.

எடுத்துக்காட்டு

தேநீர் - தேயிலை + நீர்

**தரப்பட்டுள்ள இறந்தகால வாக்கியங்களை நிகழ்கால ,எதிர்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. நான் ஒரு கவிதை எழுதினேன்
   ………………………………………..
2. புறாக்கள் பறந்து சென்றன.
   ………………………………………..
3. நாங்கள் பூந்தோட்டத்திற்கு சென்றோம்
   ………………………………………..
4. நாங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றோம்.
   ……………………………………………………..
5. நான் அழகிய காட்சிகளை வரைந்தேன்.

…………………………………………

6. நான் நூலகத்திற்கு சென்றேன்.

…………………………………

7. நாங்கள் சந்தைக்குச் சென்றோம்.


…………………………………………

8. நான் அழகிய காட்சிகளை வரைந்தேன்.

……………………………………………

**செயலொழுங்கு**

- ஆசிரியர் ஒரு தட்டில் இறந்தகால வாக்கியங்களை தயார்ப்படுத்தி வைத்துக்கொள்ளல்.
- அத்துடன் அந்த இறந்தகால வாக்கியத்திற்கான நிகழ்கால,எதிர்கால வாக்கியங்களை இரண்டு கொடிகளில் தனித்தனியே தொங்க விடுதல்.
- எழுமாறாக மாணவரை அழைத்து தட்டிலுள்ள இறந்தகால வாக்கியமொன்றை எடுத்து மாணவர்கள் முன் வாசிக்கச் வழிப்படுத்தல்
- அந்த இறந்த கால வாக்கியத்திற்கான நிகழ்கால,எதிர்கால வாக்கியங்களை கொடிகளிலிருந்து தெரிவு செய்து காட்சப்படுத்தி அதனை வாசித்து எழுத வழிப்படுததுதல்.






**…ருக்க… …டுகளை … …துக் … …தல்.**

1. … வ -…………………………………
2. இ.மி.ச -…………………………………
3. இ.ஒ.கூ -…………………………………
4. இ.ரூ.கூ -…………………………………
5. இ.பெ.கூ -…………………………………
6. த.பெ.இ -…………………………………
7. பி.ப -…………………………………
8. மு.ப -…………………………………
9. ப.கு -…………………………………
10. கி.மு -…………………………………


**செயலொழுங்கு**

- பிரிஸ்டல் போட் அட்டையில் பைக்கற்றுக்களை அமைத்து அதற்கு மேலாக சுருக்க குறியீடுகளை எழுதிக்கொள்ளுங்கள்
- ஐஸ்கிரீம் குச்சிக்களில் பிரிஸ்டல் போட் அட்டையில் சுருக்க குறியீடுகளின் கருத்துக்களை எழுதி ஒட்டிக்கொள்ளுங்கள்
- மாணவர்களை குழுக்களாக்கி பொருத்தமான கருத்துக்களை சுருக்கக்குறியீட்டு பைக்கற்றில் இட்டு வாசிக்க வழிப்படுத்தல்
- அதனை எல்லா மாணவர்களையும் எழுத வழிப்படுத்தல்




**பெயர்ச் சொற்கள்**



**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

01. காலப்பெயரைக் காட்டும் சரியான சொல் எது?

    01. கோடை  02. கண்டி  03. இனிமை

02. வவுனியா என்பது

    01. இடப்பெயர்  02. தொழிற்பெயர்  03. காலப்பெயர்

03. குணப்பெயரைக் குறிப்பது


    01. இரவு, மாரி  02. சிவப்பு, வட்டம்  03. பேனை, இலை

04. தொழிற் பெயரைக் குறிக்கும் சரியான சொல்

    01. விவசாயி  02. அறிவு  03. படித்தல்

## எதிர்கருத்துச் சொற்கள்

- எதிர்கருத்துச் சொற்கள் அடங்கிய அட்டைகளை தயார் செய்து கொள்ளுங்கள்
- அவற்றினை மாணவர்கள் கழுத்தில் அணியும் வண்ணம் மாலை போன்று தயாரியுங்கள்




- மாணவர்களை திறந்த வெளிக்கு அழைத்துச் செல்லுங்கள்
- ஒவ்வொரு மாணவர்களுக்கும் இவற்றை அணிவித்தல். அவற்றை வாசிக்கச் வழிப்படுத்துக
- பின்னர் ஆசிரியர் சமிஞ்சை வழங்கிய பின்னர் மாணவர்கள் தமது எதிர் கருத்து சோடியுடன் இணைந்து செயற்பட வழிப்படுத்துதல்.

இலாபம் - நட்டம்

- பின்னர் இவற்றை தமது வகுப்பறையில் காட்சிப்படுத்தி அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்து கொள்ள வழிப்படுத்துதல்.

➢ எடுத்துக்காட்டு :

| | |
|---|---|
| இலாபம் - நட்டம் | சாதகம் - பாதகம் |
| நண்பன் - பகைவன் | இளமை - முதுமை |
| ஆக்கம் - அழிவு | உயர்வு – தாழ்வு |
| ஞாபகம் - மறதி | உறவு - பகை |
| இருள் - ஒளி | சுத்தம் - அசுத்தம் |

**பொருத்தமான எதிர்ச் சொற்களை இணைத்து வாசிப்போம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நன்மை | ஆக்கம் | ஞாபகம் | சாதகம் | ஐக்கிய | பழமை |
| தீமை | மறதி | அழிவு | வன்சொல் | வீரன் | இன்சொல் |
| பகை | பாதகம் | பிளவு | புதுமை | உறவு | இம்மை |
| | | கோழை | மறுமை | | |

## ஒத்தக்கருத்துச் சொற்கள்

- மாணவர் தொகைக்கு ஏற்ப 10 தொடக்கம் 15 வரையிலான ஒத்தக்கருத்துச் சொற் சோடிகள் கொண்ட அட்டைகளை தயார் செய்து கொள்ளுங்கள்
- மாணவர்களை திறந்த வெளிக்கு அழைத்துச் செல்லுங்கள்
- ஒத்தக்கருத்துச் சோடியில் ஒரு சொல்லை திறந்த வெளியில் பதாகை போல் காட்சிப்படுத்துங்கள்
- பதாகையில் உள்ள சொற்களுக்கான ஒத்தக்கருத்துச் சொற்களை பெட்டி ஒன்றினுள் இட்டுக் கொள்ளுதல்.
- மாணவர்களில் ஒருவரை அழைத்து பெட்டியிலுள்ள சொல் ஒன்றை எடுக்கச் செய்தல்.
- அதற்கான ஒத்தக்கருத்தைக் கொண்ட பதாகையை நோக்கிச் சென்று அதன் கீழே அதனை செருகுவதற்கு வழிப்படுத்ததுதல்.
- அதனை அனைவருக்கும் உரத்து வாசித்துக் காட்ட வழிப்படுத்துதல்.
- இவ்வாறாக அனைத்து மாணவர்களையும் செயற்பாட்டில் ஈடுப்படுத்துதல்.
- செயற்பாடுகளை அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்து கொள்ள வழிப்படுத்துதல்.

| | |
|---|---|
| அழகு – வனப்பு | உடல் - சரீரம் |
| ஆகாரம் - உணவு | ஞானம் - அறிவு |
| துன்பம் - துக்கம் | சினம் - கோபம் |
| உண்மை – சத்தியம் | சுத்தம் - புனிதம் |
| நித்திரை – துயில் | களிப்பு – |

**ஒத்தக்கருத்து சொற்களை அறிவோம்**

| | |
|---|---|
| **குறி** | **அடையாளம், இலக்கு** |
| **வடு** | **குற்றம், தழும்பு** |
| **களிப்பு** | **உவகை, மகிழ்ச்சி** |
| **மாற்றான்** | **பகைவன், எதிரி** |
| **செய்தித்தாள்** | **நாளிதழ், பத்திரிகை** |
| **கிரீடம்** | **குடுமி, முடி** |
| **அறிவு** | **புத்தி, ஞானம்** |
| **வீதி** | **சாலை, பாதை** |
| **ஆகாரம்** | **உணவு, உண்டி** |
| **நகை** | **ஆபரணம், இகழ்ச்சி** |

**உயர் திணை** **அஃறிணை**

திணை

பால் பால்

- ஆண்பால்: அவன், பாடகன், சலீம்
- பெண்பால்: அவள், குறத்தி, சமிதா
- பலர்பால்: அதிபர், அவர்கள், பண்டிதர்

- ஒன்றன்பால்: அது, இது, குதிரை, கிளை
- பலவின்பால்: அவை, இவை, பறவைகள், கிளிகள்

**எண்**
- ஒருமை
- பன்மை

**காலம்**
- இறந்தகாலம்
- நிகழ்காலம்
- எதிர்காலம்

**இடம்**
- தன்மை
- முன்னிலை
- படர்க்கை

**<u>பால் வகைமை (மீட்டல் செயற்பாடு)</u>**

- ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றில் நான்கு நான்கு சொல்லட்டைகளை தயார் செய்து பெட்டி ஒன்றினுள் இட்டுக் கொள்ளுதல்.

ஆண்கள் ஆசிரியை மக்கள் தம்பி இறைவி
மாணவர்கள்
பறவைகள் குழந்தைகள் யானை கொக்கு
அரசன் மரம் யாழினி
விமலன் சிறுவர்கள் திருடி மலர்கள்
குயவன் வீடு

- பின்னர் பால் வகைமையை காட்டும் செருகல் அட்டையொன்றினை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துதல்.

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| | யாழினி | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

- பின்னர் மாணவர் ஒருவரை அழைத்து பெட்டியிலிருந்து சொல்லட்டை ஒன்றை எடுக்கச் செய்தல். அதனை உரிய பகுதியில் செருகச் செய்து சொல்லையும் பால் வகையையும் உரத்துக் கூறச் செய்தல்.
- இவ்வாறாக மாறி மாறி அனைத்து மாணவர்களையும் செயற்பாட்டில் ஈடுப்படுத்துதல்.
- சொல்லட்டைகள் முடியும் வரை மீண்டும் மீண்டும் மாணவர்களுக்கு சந்தர்ப்பமளித்து ஊக்கப்படுத்துதல்.
- ஒவ்வொரு கட்டங்களும் பூரணமடைந்த பின்னர் அவை தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளித்தல்.
- அவற்றை அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்து கொள்ள வழிப்படுத்துதல்.

**எதிர்ப்பாற் சொற்கள்**

- மாணவர்கள் தான் முன்பு கற்ற எதிர்ப்பாற் சொற்களை கேட்டறிதல்.
- பின்னர் கீழே தரப்பட்டுள்ள எதிர்ப்பாற் சொற்களை பெரிய அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்தி அவற்றை வாசிக்கச் செய்தல்.

| | |
|---|---|
| சிறுவன் - சிறுமி | வீரன் - வீராங்கனை |
| புத்திரன் - புத்திரி | செல்வன் - செல்வி |
| நாயகன் - நாயகி | மாணவன் - மாணவி |
| சீமான் - சீமாட்டி | சேவகன் - சேவகி |
| பண்டிதன் - பண்டிதை | நண்பன் - நண்பி |

- இவற்றிலிருந்து மாணவர்களிடம் வினாக்களை வினவுதல். எதிர்ப்பாற் சொற்களை கூறச் செய்தல்.
- மாணவர்களை குழுக்களாகப் பிரித்தல். (மாணவர் தொகைக்கு ஏற்ப)
- மாணவக் குழுக்களுக்கு இரண்டு எதிர்ப்பாற் சொற்களை வழங்கி அவற்றில் வாக்கியம் எழுத வழிப்படுத்துதல்.

  சிறுவன் - ……………………………………………………………………

  சிறுமி - ……………………………………………………………………

  புத்திரன் - ……………………………………………………………………


  புத்திரி - ……………………………………………………………………

- மாணவக் குழுக்கள் எழுதிய வாக்கியங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.
- அவ்வாக்கியங்கள் தொடர்பாக விளக்கமளித்தல், விபரித்தல்.
- வாக்கியங்களுக்கு நிறுத்தற் குறியீடுகளை இடச் செய்தல்.
- எதிர்ப்பாற் சொற்களை அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்து கொள்ள சந்தர்ப்பமளித்தல்.

**ஆண்பால் சொற்களை வட்டமிடுவோம்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மா | ண | வ | ன் | கு | ண | வா | ன் | பே |
| பே | ர | ன் | வீ | ற | சீ | மா | ன் | ர |
| பூ | ட் | டி | ர | வ | நி | ப | னை | ர |
| பே | ர | ன் | ன் | ன் | சீ | மா | ன் | ச |
| சீ | மா | ட் | டி | ப | ண் | டி | தை | ர் |
| நி | பு | ண | ன் | ரி | பூ | ட் | ட | ன் |
| பு | ண் | ணி | ய | வா | ன் | ந | ங் | கை |
| மு | த | ல் | வ | ன் | கு | ய | வ | ன் |

**எதிர்பாற் சொற்களை அறிவோம்**




**சொற்களை ஒழுங்கமைத்து வாக்கியமாக்குதல்**

1. கொடியும்/ அடம்பன்/ திரண்டால்/ மிடுக்கு
   ……………………………………………………………
2. வீதியின் / இருபக்கங்களிலும் / காணப்பட்டன/ அந்த/ நிழல் மரங்கள்
   ………………………………………………………………………………………
3. நாயைக் / பூனை/ கண்ட/ துள்ளி/ ஓடியது/ குதித்து
   …………………………………………………………..
4. சரணாலயத்திற்கு/ நாங்கள் / பறவைகள் / சென்றோம்

…………………………………………………………………

5. நல்ல/ நித்திரை/ பழக்கம் / ஆகும் / விட்டெழுவது/ அதிகாலையில்

……………………………………………………………………………….

- **செயலொழுங்கு**

- மாணவ குழுக்களுக்கு வாக்கியங்களில் உள்ள சொற்களுக்கேற்ப பதாகை அட்டைகளை தயாரித்துக் கொள்க.
- குறிப்பிட்ட மாணவர்களை சொற்களடங்கிய பதாகைகளை தயார்படுத்தி மைதானத்திற்கு முன் நிறுத்துதல்.
- சமிக்ஞை வழங்கியவுடன் மாணவர்கள் அந்த சொற்களை கொண்டு வாக்கியங்களை அமைத்து நிற்றல்.
- தனித்தனியே மாணவர்கள் சொற்களை கூறி வாக்கியமாக வாசித்தல்.
- அதனை பயிற்சிக் கொப்பியில் எழுதிக் கொள்ளல்.

| அடம்பன் | கொடியும் | திரண்டால் | மிடுக்கு |
|---|---|---|---|

வாக்கிய உறுப்புக்கள்

↓

ஏதாவது ஒரு கருத்தை உணர்த்தும் சொற்றொடர் வாக்கியம் எனப்படும்

| எழுவாய் | பயனிலை | செயற்படுபொருள் |
|---|---|---|
| யார்? எது? எவை? எனும் வினாக்களுக்கு விடை கிடைப்பது | எழுவாயின் செயலை விளக்குவது | யாரை / எவற்றை / எதை எனும் வினாக்களுக்கு கிடைக்கும் விடை செயற்படுபொருள் |

**எழுவாய் சொல்லின் கீழ் கீறிடுக.**

01. இரண்டு அடிகளில் திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்
02. சிறுவர்கள் தைப்பொங்களை மகிழ்ச்சியாக கொண்டாடினார்கள்
03. விவசாயிகள் அல்லும் பகலும் அயராது உழைத்தனர்
04. வானில் கழுகு வட்டமிடுவதை கோழிகள் கண்டன

**பொருத்தமான பயனிலைச் சொல்லை வைத்து இடைவெளிகளை பூர்த்தி செய்க**

01. குதிரை வேகமாக

……………………………………………………………………………………

02. புயல்காற்று

………………………………………………………………………………………….

03. விளையாட்டுப் போட்டியில் மகன் முதலிடம்

………………………………………………………...

04. விவசாயிகள் அயராது

………………………………………………………………………………..

05. நேற்று பாடசாலையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது

……………………………………………

**லகர, ளகர, ழகர ஒலிவேறுபாட்டுச் சொற்கள்**

- லகர, ளகர, ழகர ஒலி வேறுப்பாட்டுச் சொற்கள் அடங்கிய அட்டைகளை தயார் செய்துக் கொள்ளல்.

| | |
|---|---|
| புலி | புளி |
| வலி | வழி |
| கலை | களை |
| நீளம் | நீலம் |

| | |
|---|---|
| உழவு | உளவு |
| வலை | வளை |
| வால் | வாழ் |
| வேலை | வேளை |


- தயாரித்த அட்டைகளை காட்சிப்படுத்தி மாணவர்களை வாசிப்பதற்கு வழிபடுத்துதல்.
- பின்னர் அவற்றின் கருத்திற்கு சில வாக்கியங்களை அமைத்துக் காட்ட ஆசிரியர் வழிப்படுத்துதல்.
- புளி – நான் புளியம் பழம் உண்டேன்.
- புலி – புலி காட்டில் வாழும் கொடிய மிருகம் ஆகும்.
- இவ் எடுத்துக்காட்டினை துணையாகக் கொண்டு மாணவர்களை இரண்டு பேர் கொண்ட சோடிகளாக்குதல்.
- மாணவ சோடிகளுக்கு ஒரு ஒலி வேறுபாட்டு சொற்கள் உள்ள அட்டைகளை வழங்குதல். அவற்றின் கருத்து புலப்படும் வகையில் சிறு வாக்கியம் அமைக்க வழிப்படுத்துதல்.
- பின்னர் அவற்றை முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.
- மாணவர்கள் முன்வைத்த விடயம் தொடர்பாக கலந்துரையாடல்.
- லகர, ளகர, ழகர ஒலி வேறுப்பாட்டுச் சொற்கள் தொடர்பாக விளக்கமளித்தல்.

| | |
|---|---|
| உலவு – உலவுதல் | உழவு – பயிர்த் தொழில் |
| கலை – வித்தை/ ஆண் மான் | களை – பயன்படாத வேற்றுப்பயிர் |
| வலி – வருத்தம் | வழி – பாதை |

- இவற்றை அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்து கொள்ள வழிப்படுத்துதல்.

**குறியீட்டுப் படங்கள்**

- குறியீட்டுப் படங்களை பிரிஸ்டல் அட்டையில் தனித்தனியாக வரைந்துக் கொள்ளுங்கள்.
- அந்தப் படங்களுக்கான கருத்துக்களை பிரிஸ்டல் அட்டையில் எழுதி ஒரு கூடையில் இட்டு வைத்துக் கொள்ளுங்கள்.
- குறியீடுகள் வரையப்பட்ட அட்டைகளை தனித்தனியாக வெளிச் சூழலில் காட்சிப்படுத்துங்கள்.



- குறியீட்டுக் கருத்துக்கள் அடங்கிய சொல்லட்டைகள் கொண்ட கூடையை மைதானத்தில் நடுவே வையுங்கள்.
- மாணவக் குழுக்கள் ஒரு குறியீட்டுக் கருத்துக்கள் அடங்கிய அட்டையை எழுமாறாக எடுத்து வாசிக்க வேண்டும்.
- அதனை எடுத்துக் கொண்டு குறியீட்டுப் படம் உள்ள இடத்தில் நிற்க வேண்டும்.
- இவ்வாறு தொடர்ந்து பயிற்சி வழங்குக.



பொருள் தண்ணீரில் நனையாமல் பார்த்துக் கொள்ளவும்




மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய அலுமினியம்



மந்தை அல்லது வேறு விலங்குகள் முன்னால் பாதையைக் கடக்கக் கூடும்




மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய கண்ணாடி

**உயர்திணை – அஃறிணை**

- உயர்திணை, அஃறிணையை குறிக்கின்ற காட்சிப்படங்கள், சொல்லட்டைகள் என்பவற்றை தயார்படுத்தி வைத்திருத்தல்.
- மேலும் செயற்பாட்டிற்காக இரண்டு பெட்டிகள், செருகல் அட்டைகள் என்பவற்றையும் தயார்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| குரங்கு | மேசை | ஆசிரியர் | தந்தை | யானை |
| வியாபாரி | சங்கு | குழந்தை | மேரி | ஜனாதிபதி |

- மாணவர்களிடம் உயர்திணை, அஃறிணை தொடர்பான முன்பு கற்ற விடயத்தினை அறிவதற்காக காட்சிப்படங்களை வழங்குதல்.
- மாணவர்கள் முன்னே உயர்திணை, அஃறிணை என பெயரிடப்பட்ட இரண்டு பெட்டிகளை வைத்தல்.
- பின்னர் மாணவர்கள் ஒவ்வொருவராக முன்வந்து தனது கையில் வைத்துள்ள காட்சிப்படத்தின் பெயரைக் கூறி உரிய பெட்டியில் படத்தை இடச் செய்தல்.



→ அஃறிணை




→ உயர்திணை

- மாணவர்களை உரிய முறையில் வழிப்படுத்துதல்.
- உயர்திணை, அ..்றிணை தொடர்பான உரிய விளக்கத்தினை மாணவர்களுக்கு வழங்குதல்.
- பின்னர் மாணவர்களை குழுக்களாகப் பிரித்து தயாரித்த சொல் அட்டைகளையும் சிறு செருகல் அட்டை ஒன்றினையும் வழங்குதல்.
- ஆச் சொற்களை உரிய முறையில் வகைப்படுத்தி செருகல் அட்டையில் செருகச் செய்தல்.
- அவற்றை முன்வைத்து விளக்கமளிக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாடுகளை அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்து கொள்ள வழிப்படுத்துதல்.

**ரகர, றகர வேறுப்பாட்டுச் சொற்கள்**

- ரகர, றகர ஒலி வேறுப்பாட்டுச் சொற்கள் கொண்ட சொல்லட்டைகளை தயாரித்து தட்டொன்றில் வைத்துக் கொள்க.




- [illegible]
- பின்ன[illegible], றகர ஒலி வேறுப்பாட்டின[illegible]

| ரகர சொற்கள் | [illegible] |
|---|---|
| கூரை | கூறை |
| பரி | பறி |
| இரக்கம் | இறக்கம் |

- பின்னர் இச்சொற்களின் கருத்தை பெரிதாக எழுதி காட்சிப்படுத்தி அவற்றிற்கான விளக்கத்தினை வழங்குக.

| ரகர வேறுபாடு | றகர வேறுபாடு |
|---|---|
| கூரை – வீட்டுக்கூரை | கூறை – கறைச் சேலை |
| பரி – குதிரை | பறி – பிடுங்கு |

| | |
|---|---|
| இரக்கம் - மனவுருக்கம் | இறக்கம் - சரிவு |
| உரை – உரையாடல் | ஊறை – மேலுறை |
| ஊரி – ஒருவகை சங்கு | ஊறி – கசிந்து |
| பாரை – ஒருவகை மீன் | புாறை – கற்பாறை |

- இவற்றை மாணவர்கள் அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்து கொள்ள வழிப்படுத்துக.
- மாணவர்கள் தனித்தனியே இச்சொற்களில் கருத்துப் புலப்படும் வகையில் வாக்கியங்கள் அமைத்துக் காட்ட கூறுக.


**ஒருமை – பன்மை**

- மாணவர்களுக்கு தேவையான ஒருமை, பன்மை சொற்களை தயார்படுத்தி வைத்துக் கொள்க.

| | | | |
|---|---|---|---|
| **பத்திரிகை** | **பத்திரிகைகள்** | **விரல்** | **விரல்கள்** |

- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- ஒருமை, பன்மை சொற்களை வகைமையை காட்டும் செருகல் அட்டையொன்றினை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துக.
- மாணவக் குழு பயிற்சியில் ஈடுபடும் வகையில் சொல்லட்டைகளை வழங்குக.
- முதலாவது குழுவில் மாணவர் ஒருவர் ஒரு சொல் அட்டையை எடுத்து அதனை உரத்து வாசித்து உரிய பகுதியில் செருக வேண்டும்.
- இரண்டாவது குழுவில் உள்ள மாணவர் அதற்கு பொருத்தமான சொல் அட்டையை எடுத்து, அதனை உரத்து வாசித்து உரிய பகுதியில் செருக வேண்டும்.
- இரண்டாவதாக செருகியவர் மீண்டும் ஒரு சொல்லட்டையை தெரிவு செய்வார்.
- இவ்வாறாக அனைத்து மாணவர்களையும் செயற்பாட்டில் ஈடுப்படுத்துக.
- பின்னர் மாணவர்களை இருவர் கொண்ட சோடிகளாக்குக.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒருமை, பன்மை அடங்கிய சொல் அட்டைகளை வழங்குக.

- அவற்றில் வாக்கியங்கள் அமைத்து முன்வைக்க வழிப்படுத்துக.
  - யானை – யானை ஆடி அசைந்து வந்தது.
  - யானைகள் – யானைகள் ஆடி அசைந்து வந்தன.
- வாக்கியங்கள் எழுதும் போது நிறுத்தற் குறியீடுகள் இட வழியுறுத்துக.
- மாணவர்களை முன்வைக்க வழிப்படுத்துக.
- செயற்பாடுகளை அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்து கொள்ள வழிப்படுத்துக.






- ஒரு நாட்டின் பெருமை அங்குள்ளவர்களின் கல்வியில் தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்கள் போல போற்றுவது எமது கடமை. எனவே நூல்நிலையங்கள் முதலியவற்றில் காணப்படும் நூல்களை கிழிக்காமல் பக்குவமாகப் பயன்படுத்துவோம்.

1. ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் எதில் தங்கியுள்ளது?

   ……………………………………………………………………

2. சிறுமை என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?

   ……………………………………………………………………

3. நூலகங்கள் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?

   ……………………………………………………………………

4. இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக?

   ……………………………………………………………………

5. கவனமாக என்ற கருத்தை தரும் சொல்லை எழுதுக?

   ……………………………………………………………………

6. தன்மை பன்மை எதிர்கால வினைச்சொல்லை எழுதுக?

   ……………………………………………………………………

❖ சரியான சொல்லைத் தெரிவு செய்து அதனை இடைவெளியில் எழுதுக.

6. சூரியனது ...................... உட்புகாத மரங்கள் அடர்ந்த காடு ஆகும். (ஒளி, ஒழி, ஒலி)

7. பாடசாலையின முதலாவது மணி ................... சில நிமிடங்களின் பின்னர் கேட்டது. ( ஒளி, ஒலி, ஒழி)

8. சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி ..........................ந்தன. (ஒளி, ஒழி, ஒலி)

9. காடுகளை ......................... ப்பதினால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகின்றது. ( அலி, அழி, அளி)

10. இந்த பூமியைச் சுற்றி ................... மண்டலம் உள்ளது. (வலி, வளி, வழி)

11. சில குழந்தைகளுக்கு அடிக்கடி .......................... உண்டாவது வழக்கம். (வலி, வழி, வளி)

12. சுற்றுலாப் பயணி ஒருவர் கண்டிக்குச் செல்லும் ................... எதுவெனக் கேட்டார். (வலி, வளி, வழி)

13. உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் ...................... வது உடம்புக்கு நல்லது. (உலவு, உளவு, உழவு)

14. .......................... பார்த்தவன் நகரக் காவலரால் பிடிக்கப்பட்டான். (உலவு, உளவு. உழவு)

15. ................................ தொழிலுக்கு ஒப்பானதாக வேறெதுவும் இவ்வுலகில் இல்லை. (உலவு, உளவு, உழவு)

❖ விடை எழுதுக.

1. கரடி உறுமும் என்பது போல் கழுதை ?
   ..........................................................................................

2. கோழி கொக்கரிக்கும் என்பது போல மயில்?
   ..........................................................................................

3. வண்டு இரையும் என்பது போல் குருவி?
   ..........................................................................................

4. ஆந்தை அலறும் என்பது போல புறா?
   ..........................................................................................

5. குதிரை கனைக்கும் என்பது போல நரி?
   ..........................................................................................

❖ விடுகதைக்கு விடை எழுதுக.

1. உலகமெல்லாம் உறங்கி விடும். ஆனால் இவர்கள் மட்டும் உறங்க மாட்டார்கள் இவர்கள் யார்?

   ..........................................................................................

2. நான்கு கால்கள் கொண்டவன். ஆனால் இவனுக்கு வால் கிடையாது. அவன் யார்?

   ..........................................................................................

3. பாடுவான் ஆடமாட்டான். பேசுவான், அசையமாட்டான். அவன் யார்?
   ..........................................................................................

4. உலகில் மெலிந்தவன். உடைகளைக் காப்பவன். அவன் யார்?

............................................................................................

5. சின்னப் பெட்டிக்குள் கீதங்கள் ஆயிரம் ஆயிரம். அது என்ன?

............................................................................................

6. மெல்லியதாய் இருக்கும். தண்ணீரில் மிதக்கும். ஆயிரம் பேர் சேர்ந்தாலும் அதனைத் தூக்க முடியாது. அது என்ன?

............................................................................................

7. மரத்தில் தொங்கும். இனிப்புப் பொட்டலத்திற்குள் காவலர்களே அதிகமாம். அது என்ன?

............................................................................................

8. முகத்தைக் காட்டுவான். முதுகைக் காட்டமாட்டான். அவன் யார்?

............................................................................................

9. கண்ணுக்கு அலங்காரம், பார்வைக்கு உத்தரவாதம். அது என்ன?

............................................................................................

10. ஓடையிலே ஓடாத நீர், ஒருவரும் குடிக்காத நீர் . அது என்ன?

............................................................................................

11. கடல் நீரால் வளர்வான். மழை நீரால் மறைவான். அவன் யார்?

............................................................................................

12. விடிந்தவுடன் வேலை செய்வான். வேலை இல்லையேல் மூலையிலே கிடப்பான். அவன் யார்?

............................................................................................

**இடைவெளி நிரப்புக.**

மனமுண்டால் ............................................

இளங்கன்று ............................................

இக்கரை மாட்டுக்கு ............................ பச்சை.

பழகப் பழகப் ...........................புளிக்கும்.

தவளையும் தன் ............................................

போதும் என்ற ........................... செய்யும் மருந்து.

சிறு துரும்பும் .................................உதவும்.

குற்றம் பார்கிற் ........................... இல்லை.

நிழலின் அருமை ……………………… தெரியும்.

அன்பான சினேகிதனை ……………………… அறியலாம்.

## கணிதம்

எண்கள்

செயற்பாடு 01

- 0 – 9 வரையான இலக்கங்களை மாணவர்களுக்கு காட்சிப்படுத்தக
- எழுமாறாக மாணவர்களை அழைத்து ஈரிலக்க, மூவிலக்க எண்களை உருவாக்கி கூறச் செய்க
- உருவாக்கிய எண்களை கரும்பலகையில் ஒட்டுமாறு வழிப்படுத்துக
- மாணவர்களை வட்டமாக நிறுத்தி 0 – 9 இலக்கங்களை வழங்கி நான்கிலக்க எண்களை உருவாக்கச் செய்க
- உருவாக்கிய எண்ணை தமக்கு எதிரே உள்ளவரை கூறச் செய்தல்
- உருவாக்கிய எண்களை சொற்களில் எழுத வழிப்படுத்துக

செயற்பாடு 02

- 0 – 9 வரையான இலக்கங்களை மாணவர்களுக்கு காட்சிப்படுத்தக
- எழுமாறாக மாணவர்களை அழைத்து ஈரிலக்க, மூவிலக்க எண்களை உருவாக்கி கூறச் செய்க
- உருவாக்கிய எண்களை கரும்பலகையில் ஒட்டுமாறு வழிப்படுத்துக
- காட்சிப்படுத்திய எண்களை அப்பியாச கொப்பியில் குறித்துக் கொள்ள வழிப்படுத்துங்கள்
- அவ் எண்களை சொற்களில் எழுத வழிப்படுத்துக

- ஈரிலக்க எண்கள் தொடர்பாக மீள வலியுறுத்துக

செயற்பாடு

- 1 4 2 5

- மாணவர்களுக்கு இவ்வாறான ஒப்படை பத்திரங்களை வழங்குக
- கட்டத்திலுள்ள இலக்கங்களை பயன்படுத்தி நான்கிலக்க எண்கள் ஐந்தை கட்டியெழுப்ப வழப்படுத்துக
- அவ்வெண் ஒவ்டிவான்றினதும் எண் பெயரை எழுத வழிப்படுத்துக

செயற்பாடு

- மாணவர்கள் நன்கு அவதானிக்க கூடிய எண்சட்டத்தை காட்சிப்படுத்துக
- எழுமாறாக ஒரு மாணவரை அழைத்து தான் விரும்பிய எண்ணை வகைகுறிக்க சந்தர்பமளிக்குக
- வகைகுறித்த எண் தொடர்பான பின்வரும் வினாக்களை வினாவுங்கள்

    1. ஒன்றினிடத்தில் வகை குறிக்கும் பெறுமானம் யாது?
    2. பத்தினிடத்தில் வகை குறிக்கும் பெறுமானம் யாது?
    3. நூறினிடத்தில் வகை குறிக்கும் பெறுமானம் யாது?
    4. ஆயிரமாம் இடத்தில் வகை குறிக்கும் பெறுமானம் யாது?

- போன்ற வினாக்களை மாணவரிடத்தே வினாவி அது தொடர்பான விளக்கத்தை வழங்குக.
- மேலே எண்சட்டத்தில் காட்டப்படும் எண்ணை எழுதிக்காட்டி உரத்து வாசிக்க செய்க
- அவ்வெண்ணை விரித்து எழுத வழிப்படுத்துங்கள்

செயற்பாடு

- மாணவர்களை தாம் விரும்பும் நிறங்களுக்கேற்ப குழுக்களாக்குங்கள்
- பின்வரும் இலக்கங்கள் எழுதப்பட்ட அட்டைகளை வழங்குக

| | | | |
|---|---|---|---|
| 1 7 9 5 | 3 4 2 0 | 6 8 2 5 | 7 3 2 5 |

- இது போன்ற எண்கள் எழுதப்பட்ட அட்டை ஒன்று வீதம் குழுக்களுக்கு வழங்குக
- அவ் அட்டையை பயன்படுத்தி நான்கிலக்க எண்கள் ஐந்தை உருவாக்கி அதை விரித்தெழுத வழிப்படுத்துங்கள்

செயற்பாடு

- 10000 – 100000 வரை எண்களை மாணவர்களுடன் உரத்து வாசிக்க
- மாணவர்களை எதிர் எதிர் பக்கங்களில் நிறுத்தி முதலாவது இருக்கும் மாணவனிடம் பிளாஸ்டிக் போலை வழங்குக
- முதலாவது மாணவன் 10000 என்று கூறி எதிரே உள்ள மாணவனுக்கு பந்தை எறிய செய்க அவர் 20000 எனக் கூறி எதிரே உள்ள மாணவனுக்கு பறிமாறச் செய்க
- இவ்வாறு மாறி மாறி 10000 இன் மடங்குகளை கூற வழிபடுத்துங்கள்
- பெரிய எண்களை எழுதும் போது ஒன்றினிடத்தில் இருந்து இடதுப்புறமாக மும் மூன்று எண்களை வேறாக்கி எழுத அறிமுகம் செய்க.
- மாணவர்களை 10000 தொடக்கம் 100000 வரை எண்குறிகளையும் எண் பெயரையும் எழுத வழிப்படுத்துங்கள்
- எடுத்துக்காட்டு 10000, 20000, 30000, …..

செயற்பாடு

- 0 – 9 வரை எழுதப்பட்ட எண்ணட்டைகளை ஒரு பொட்டியில் இடுக
- ஐந்து மாணவர்களை பொட்டியில் இருந்து ஒவ்வொரு இலக்கங்களை பெற்று எண் சட்ட அட்டையில் ஒட்ட செய்க
- எடுத்துக்காட்டு

| பத்தாயிரங்கள் | ஆயிரங்கள் | நூறுக்கள் | பத்துக்கள் | ஒன்றுக்கள் |
|---|---|---|---|---|
| 2 | 4 | 1 | 5 | 3 |

- மாணவர்களை எழுமாறாக எண்ணை கூற வழிப்படுத்தல்
- பெரிய தாளில் எண்சட்டக அட்டையை வரைந்து கொள்ள அறிவுறுத்தல் வழங்குக

11362 14326 56418 27548

- ஒவ்வொரு குழுவுக்கும் எண்களை தெரிவு செய்ய சந்தர்ப்பம் வழங்குக
- தெரிவு செய்த எண்ணை எண்சட்டத்தில் வகை குறிக்க சந்தர்ப்பம் வழங்குக
- அவ் எண்சட்டத்தை காட்சிப்படுத்தி எண்ணை கூறச் செய்க
- இவ்வாறான பயிற்சிகளை வழங்குக

செயற்பாடு

- 100000 இற்கு உட்பட்ட எண்ணொண்றை காட்சிப்படுத்துக
- அவ் எண்ணை எண் சட்டத்தில் குறித்துக் காட்டுக

| பத்தாயிரங்கள் | ஆயிரங்கள் | நூறுக்கள் | பத்துக்கள் | ஒன்றுக்கள் |
|---|---|---|---|---|
| 6 | 4 | 2 | 3 | 1 |

- இவ்வெண்ணில் அந்தந்த இலக்கம் இருக்கும் இடத்தை விளக்குக
- பத்தாயிரம், ஆயிரம், நூறுகள், பத்துகள், ஒன்றுகள் என எழுதப்பட்ட அட்டைகளை வட்டம் வரைந்து அதனை காட்சிப்படுத்துக
- மாணவர்களுக்கு 6 என்ற இலக்கத்தை கூறியவுடன் எல்லோரும் ஆறு என்ற வட்டத்தை நோக்கி ஓட வழிப்படுத்துக
- இவ்வாறு மாறி மாறி இலக்கங்களை கூறி மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துக
- இதே போன்று இடப்பெறுமானம், இலக்கத்தினால் வகை குறிக்கப்படும் பெறுமானங்களையும் இனங்காண செயற்பாடுகளை வழங்குக.

செயற்பாடு

- 45, 126 எண்சட்டக அட்டை ஒன்றில் வகை குறிக்க
    1. இலக்கம் 4 உள்ள இடம் யாது? ………………
    2. அவ்விடத்து இடப்பெறுமானம் யாது? …………………….
    3. இலக்கம் 4 இனால் வகைக் குறிக்கப்படும் பெறுமானம் ………………..
- இது போன்ற பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குக


**கூட்டல்**

செயற்பாடு

- கூட்டுத்தொகை 20 வரையிலான எண் பிணைப்புக்கள் மூலம் மனக் கணிதமாக வினாக்களை வினாவுக
- நிற அடிப்படையில் டீன் குற்றிகளை கோப்பைகளில் இட்டு காட்சிப்படுத்துக
- வெற்று கோப்பைகளை மேசையின் மீது வைக்க எழுமாறாக மாணவன் ஒருவனை அழைத்து மன கணித வினா ஒன்றை வினவுங்கள்
- அவ் மன கணிதத்தை டீன்ஸ் குற்றிகளைப் பயன்படுத்தி வெற்று கோப்பையில் டீன்ஸ் குற்றிகளை எண்ணி போடுவதன் ஊடாக மன கணிதத்தை தீர்க்க வழிப்படுத்துக
- இவ்வாறு பல மனித செயற்பாடுகளை செய்விக்க

## எண் விளக்கம்

**01)** இந்த எண் சட்டத்தில் வகைக் குறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.




: ……………………………………………………………………….

**02)** இலக்கங்களில் எழுதுக.
முப்பதாயிரத்து எழுநூற்று ஐம்பது ………………………………………………….

**03)** தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துக்களில் எழுதுக.
**40039**

………………………………………………………………………………………………

**04)** எழுத்தில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கத்தில் எழுதுக.
அறுபத்தொன்பதாயிரத்து தொண்ணூற்றொன்பது

………………………………………………………………………………………

**05)** தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துக்களில் எழுதுக.

**3 401 : ……………………………………………………………………………………..**

**06)** பெட்டியினுள் தரப்பட்டுள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச்சிறிய எண்ணை எழுதுக.

| **8** | **3** | **4** | **6** |
|---|---|---|---|

……………………………………………………………

**07)** வட்டத்தில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகப்பெரிய எண்ணை எழுதுக.

**5**

**4** **8**

**7**

…………………………………………………………………………… ..

**08)** காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப்பெரிய எண் யாது?

| 6 | 0 |
|---|---|
| 5 | 9 |

உரோமன் இலக்கம்

**09)** எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்களை உரோமன் இலக்கங்களில் எழுதுக.

(i) ஐந்து - ……………. **(ii)** ஒன்பது - …………………


**10)** தரப்பட்டுள்ள உரோமன் எண்ணிற்கு அடுத்துவரும் உரோமன் எண்ணை எழுதுக.

VIII - ………………………………

**11)** பூச்சாடியில் உள்ள பூக்களின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் எழுதுக.

…………………………………………………….





**12)** தொட்டியிலுள்ள மீன்களின் எண்ணிக்கையை உரோமன் எண்குறியில் எழுதுக.

……………………………………………

**13)** கீழே தரப்பட்டுள்ள எண்ணுக்கு முன்னால் உள்ள எண்ணையும் பின்னால் உள்ள எண்ணையும் உரோமன் எண் குறியீடுகளில் எழுதுக.

……………………..ix …………………………

**கூட்டல்**

**14)** **9540** உடன் **805** ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது?

:……………………………………………………………………………………

**கழித்தல்**

**15)** **6045** இலிருந்து **350** ஐக் கழிக்குக. வித்தியாசம் யாது?

: ……………………………………………………………………………………………

**பின்னம்**

**16)** பின்வரும் பின்னங்களில் $\frac{1}{3}$ இற்கான சமவலுப் பின்னத்தைத் தெரிவு செய்து எழுதுக.

$\frac{1}{6}$, $\frac{2}{6}$ , $\frac{3}{6}$ , $\frac{4}{6}$ ………………………………………………………….

**17)** ¼ இன் சமவலுப்பின்னத்தை எழுதுக. ……………………………………………..


**18)** $7\frac{8}{10}$, $\frac{25}{100}$ ஆகியவற்றைத் தசம எண்ணாக எழுதுக.

$7\frac{8}{10}$= **………………………** $\frac{25}{100}$= **……………………………..**

**19)** மிகச்சிறிய எண்ணைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக?

$\frac{9}{10}$ , $\frac{3}{4}$ , **0.7,** **0.9 ,** **………………………………**


**20)** உருவில் $\frac{1}{8}$ நிழற்றப்பட்டுள்ளது.



(i) அதில் மேலும் ¼ ஐ நிழற்றுக.

(ii) அப்போது நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைப் பின்னமாக எழுதுக.

**21)** தரப்பட்டுள்ள உருவில் $\frac{3}{10}$ஐ நிழற்றுக.



அதில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைப் பின்னமாக எழுதுக.


……………………………………………………………………………………………

**22)** வழங்கப்பட்டுள்ள சதுரக் கோட்டுப்படம் சம பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதன் மொத்தப் பரப்பளவில் **0.3** பகுதியை நிழற்றுக.




**23)** எதிரே தரப்பட்டுள்ள உருவில் ½ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக

**24)** எதிரே தரப்பட்டுள்ள உருவில் 0.3 ஐ (பென்சிலால் அல்லது பேனையால் ) நிறந்தீட்டுக.




**25)** உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியைப் பின்னமாக எழுதுக.



……………………………………………………………


**26)** பின்வரும் பின்னங்களைக் கூட்டுக. $\frac{2}{3} + \frac{1}{4}$ = ……………………………

**27)** **12** பென்சில்களிலிருந்து **¾** ஐ விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் பென்சில்களின் எண்ணிக்கை உரோம எண்ணில்




…………………………………………………………………………………………………….

**28)** ஒரு காணியில் ½ இல் காய்கறிப் பயிர்களும் ¼ இல் பூச்செடிகளும் நடப்பட்டுள்ளன. அவ்வாறு நடப்பட்டுள்ள நிலத்தின் அளவு மொத்தக் காணியில் என்ன பகுதியாகும்?







: ……………………………………………………………………………………………………..

**எண் கோலம்**

**29)** எண் கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் எழுதுக.

**3045, 3035, 3025, 3015, …………… , ……………**

**30)** எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் முறையே எழுதுக.

**4040 , 4030, 4020, 4010, ………………….. , ………………………**

**31)** எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் வெற்றிடத்தில் முறையே எழுதுக.

**4050, 4060, 4070, 4080, ………………. , ……………….**

**32)** அடுத்துவரும் எண்களைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 8 | 14 | 12 | 21 | | |

**33)** தரப்பட்டுள்ள எண் கோலங்களின் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

**(i) 6, 12, 24, 48, ……………. , …………………**

**(ii) 27, 23, 19, 15, ……………. , …………………**

**34)** இவ் எண்கோலத்தில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

**3, 12, 21, 30 ………………… , ………………………**


**35)** கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒழுங்குமுறைக்கு ஏற்ப எண்கோலம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு நீக்க வேண்டிய எண் யாது?

**64, 46, 32, 16, 8 ……………………..**

**36) 3,5,7** என்னும் எண் அட்டைகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க ஆறு எண்களையும் ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்துக.

**…………, 375, ……………. , ……………….. , 735, ………………….**

**37)** ஒவ்வொன்றும் **25m** நீளமுள்ள **4** உலோகத் துண்டுகள் ஒரு தனித் துண்டாக ஒட்டப்பட்டன. ஒவ்வொரு தடவை ஒட்டும்போது ஒவ்வோர் உலோகத் துண்டின் **5cm** ஐ ஒன்றன்மீதொன்று வைக்க நேரிட்டது. இறுதியாகக் கிடைக்கும் உலோகத் துண்டின் நீளம் யாது?



:
…………………………………………………………………………………………………


**38) 100cm** நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் **15cm** நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் **5cm** வீதம் ஒன்றின் மீது ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது?



**: ……………………………………………………………………………………………..**

**39)** ஒரு போத்தலில் உள்ள நீரின் கனவளவு **750ml** ஆகும். இத்தகைய **9** போத்தல்களில் உள்ள நீரின் கனவளவு யாது?

:




…………………………………………………………………………………………………

**40)** **1500ml** கொள்ளளவுடைய ஒரு பாத்திரத்தில் **900ml** நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் **900ml** நீரைக் கவனமாக ஊற்றும் போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது?


**: ……………………………………………………………………………………………**

**41)** A,B என்னும் பாத்திரங்களில் இருக்கும் நீர்க் கனவளவுகளுக்கிடையே உள்ள வித்தியாசம் எத்தனை மில்லிலீற்றர்?




……………………….

**42)** **1** லீற்றர் **500** மில்லிலீற்றர் நீரை நான்கு குவளைகளில் சமமாக இடும்போது ஒரு குவளையில் இருக்கும் நீரின் அளவைக் காண்க. (**1** லீற்றர் = **1000** மில்லிலீற்றர்)



: …………………………………………………………………………………………….

(i) பால் தேநீரைத் தயாரிக்கும் போது முதலில் **4** லீற்றர் **150** மில்லிலீற்றரும் இரண்டாவதாக **3** லீற்றர் **450** மில்லிலீற்றரும் தயாரிக்கப்பட்டன. தயாரிக்கப்பட்ட பால் தேநீரின் மொத்த லீற்றர் எவ்வளவு?

……………………………………………………………………………………………

**43)** ஒரு பாத்திரத்தில் **2** லீற்றர் **375** மில்லிலீற்றர் குளிர்பானம் உள்ளது. அக்குளிர் பானம் ஐந்து சம போத்தல்களில் நிரப்பப்பட்டது.
ஒரு போத்தலில் உள்ள குளிர்பானத்தின் அளவு யாது? ………………………………….

**44)** ஒரு லீற்றர் பானத்தை ஒவ்வொன்றும் **275** மில்லிலீற்றர் அளவான **3** குவளைகளில் இடும்போது எஞ்சியிருக்கும் அளவு யாது?
(**1** லீற்றர் = **1000** மில்லிலீற்றர்)





…………………………………………………………………………………….

**45)** ஒரு பாத்திரத்திலுள்ள மண்ணெண்ணெயிலிருந்து **6** லீற்றர் **250** மில்லிலீற்றரை அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு **12** லீற்றர் **475** மில்லிலீற்றர் ஆகும். பாத்திரத்திலே முதலில் இருந்த மண்ணெண்ணெயின் அளவு யாது?




………………………………………………………………………………………………

**46)** இக்கடிகாரத்தின் முகத்தை அவதானியுங்கள். மணித்தியாலக் கம்பிக்கும் நிமிடக் கம்பிக்கும் இடையே உள்ள கோணம் அடுத்து எவ்வளவு நிமிடத்துக்குப் பின்னர் செங்கோணமாக இருக்கும்?





**47)** ஒரு வகுப்பறையில் **2** கதிரைகள் வீதம் உள்ள **12** நிரைகளும் **3** கதிரைகள் வீதம் உள்ள **6** நிரைகளும் உள்ளன. அந்நிரைகளில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?

:

…………………………………………………………………………………………………

**48)** **6** பென்சில்கள் வீதம் உள்ள நான்கு பெட்டிகளும், **8** பென்சில்கள் வீதம் உள்ள மூன்று பெட்டிகளும் உள்ளன. அந்த ஏழு பெட்டிகளிலும் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை யாது?





: …………………………………………………………………………………………

**49)** **130** பென்சில்களை **7** பேர்களிடையே சமமாகப் பங்கிடும் போது எஞ்சும் பென்சில்களின் எண்ணிக்கை யாது?

: ………………………………………………………………………………………

**50)** **600** இனிப்புகளில் **60** ஐ மீதப்படுத்தி வைத்து மற்றைய எல்லாம் ஒரு பைக்கற்றில் **5** வீதம் இருக்குமாறு சிறிய பைக்கற்றுக்களாகப் பொதிசெய்யப்பட்டன.






(i) சிறிய பைக்கற்றுக்களில் பொதி செய்யப்பட்ட இனிப்புக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

………………………………………………………………………………………

(ii) அத்தகைய எத்தனை சிறிய இனிப்புப் பைக்கற்றுக்களைத் தயார் செய்யலாம்?


………………………………………………………………………………………

**51)** பரிசளிப்பு விழாவுக்காக **810** புத்தங்கள் கிடைத்துள்ளன. ஒரு பொதியில் **4** புத்தகங்கள் வீதம் இருக்குமாறு எத்தனை பொதிகளைச் செய்யலாம்?



…………………………………………………………………..

**52)** வட்டத்தினுள் உள்ள எண்களில் **8** இன் மடங்குகளைத் தெரிவு செய்து எழுதுக?




……………………………………………………………………


**53)** **2010** ஆம் ஆண்டில் **50**வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் திரு.மோகன் தமது **30** ஆவது பிறந்த தினத்தை எந்த ஆண்டில் கொண்டாடினார்?




:

………………………………………………………………………………………………

**54)** பிற்பகல் **2.45** இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட கீதா **45** நிமிடத்தில் நூல்நிலையத்திற்குச் சென்றாள். அவள் அங்கு **40** நிமிடங்கள் இருந்தாள்.



(i) கீதா நூல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டாள்? பிற்பகல் ………….


(ii) அந்நேரத்தை **24** மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக?

: ……………………………………………………………………………………………

**55)** கீதா **1995** ஆம் ஆண்டு ஒகஸ்ட் **21** ஆந்திகதி பிறந்தார். இன்று அவருடைய வயது யாது?


: ………………………………………………………………………………………………..

**56)** புகையிரத நிலையத்திற்கு **14:20** மணித்தியாலத்திற்கு வரவேண்டிய புகையிரதம் **45** நிமிடங்கள் தாமதமாக வருவதாக அறிவிக்கப்பட்டது.



இதற்கேற்ப புகையிரதம் வரும் நேரம் யாது? ……………………. மணித்தியாலம்

**57)** காலை **6.50** இற்குப் பாடசாலைக்கு வந்த முரளி பிற்பகல் **2.15** வரைக்கும் பாடசாலையில் தங்கியிருந்து வீட்டிற்கு புறப்பட்டுச் சென்றான்.






(1) முரளி பாடசாலையிலிருந்து புறப்பட்ட நேரத்தை **24** மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.

…………………………………………………………………………………

(2) முரளி பாடசாலையில் எவ்வளவு நேரம் தங்கியிருந்தான்?

………………………… மணித்தியாலம் …………………. நிமிடம்

**58)** ஒரு நூலகத்திற்கு வந்து அங்கு **4** மணித்தியாலம் **30** நிமிடத்தைச் செலவிட்ட சங்கர் அங்கேயிருந்து பி.ப **3.00** இற்குப் புறப்பட்டான்.




(i) சங்கர் புறப்பட்டுச் சென்ற நேரத்தை **24** மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக?
……………………………….. மணித்தியாலம்

(ii) சங்கர் நூலகத்திற்கு வந்த நேரம் யாது? முற்பகல் …………………………

**59)** **2012** ஆம் ஆண்டின் ஒகஸ்ட் மாதத்தில் முகுந்தனின் வயது **10** ஆண்டுகளும் **5** மாதங்களும் , கமலனின் வயது **12** ஆண்டுகளும் **8** மாதங்களும் ஆகும். இருவருடைய வயதுகளின் கூட்டுத்தொகையைக் காண்க?

……………. ஆண்டுகள் ……… மாதங்கள்



**60)** பிற்பகல் **4.30** மணிக்கு புத்தகம் ஒன்றை வாசிக்க ஆரம்பித்த கவிதாவுக்கு அதனை வாசித்து முடிப்பதற்கு **1** மணித்தியாலம் **35** நிமிடங்கள் எடுத்தது. அவர் புத்தகத்தை வாசித்து முடித்த நேரம் இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக?



:………………………………………………………………………………..

**61)** ஒரு பாடசாலையில் விளையாட்டு விழா முற்பகல் ஒன்பது மணி முப்பது நிமிடத்திற்கு

ஆரம்பித்தது. அது **4** மணித்தியாலம் **45** நிமிடத்திற்குப் பின்னர் முடிவடைந்தது. விளையாட்டு விழா முடிவடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக?



.........................................................................................................

**62)** பாடசாலை கலை நிகழ்ச்சிகள் **11.30** மணிக்கு ஆரம்பமாகி **14:15** மணிக்கு முடிவடைந்தன ஆயின் கலைநிகழ்ச்சிகள் எவ்வளவு நேரம் நடைபெற்றன?

: .........................................................................................................

**63)** வெற்றிடங்களைச் சரியாக நிரப்புக.

| நாணயத் தாள் வகை | நாணயத் தாள் எண்ணிக்கை | பணம் |
|---|---|---|
| ரூபா **50** | **1** | ரூபா **50** |
| ரூபா **20** | | ரூபா |
| ரூபா **10** | | ரூபா |
| மொத்தம் | **6** | ரூபா **130** |

**64)** மூன்று நண்பர்கள் ஆளுக்கு ரூபா 200 வீதம் செலுத்திச் சேர்த்த பணத்தில் ரூபா 285 இற்குப் பழங்களை வாங்கி மீதிப் பணத்தைத் தம்மிடையே சமமாகப் பங்கிட்டனர்.



**(i)** பழங்களை வாங்கிய பின்னர் எஞ்சியிருந்த பணம் யாது?

ரூபா ......................

**(ii)** மீதிப் பணத்தில் ஒருவருக்கு எவ்வளவு கிடைத்தது?

ரூபா ..............................

**65)** ரூபா **47.00** விலையுள்ள ஒரு பயிற்சிப் புத்தகத்தையும் ரூபா **12.50** விலையுள்ள பேனையையும் வாங்குவதற்கு என்னிடம் ரூபா **50.00** உள்ளது. மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும்?

……………………………………………………………………………………………

**66)** ஒரு நாடகத்திற்காக நுழைவுச் சீட்டுக்களை விற்பதன் மூலம் மோகன் சேகரித்த பணம் ரூபா **1525** ஆகும். கண்ணன் சேகரித்த பணம், மோகன் சேகரித்த பணத்திலும் பார்க்க ரூபா **175** இனால் கூடியது. கமலா சேகரித்த பணம், மோகன் சேகரித்த பணத்திலும் பார்க்க ரூபா **175** இனால் குறைவானது. மூவரும் சேகரித்த பணம் யாது?


:

…………………………………………………………………………………………

67) ஐந்து நண்பர்கள் தம்மிடமுள்ள பணத்தைச் சமமாக இட்டு ஒன்று ரூபா **30** வீதம் **8** தோடம்பழங்களையும், ஒன்று ரூபா **50** வீதம் **6** அப்பிள் பழங்களையும் வாங்கினர்

……………………………………………………………………………………………..

68) இந்த உருவினுள் காணப்படும் செங்கோணத்திலும் குறைந்த கோணங்களின் எண்ணிக்கை யாது?



:

………………………………………………..

**69) 6kg 500g** சீனியிலிருந்து எத்தனை **250g** சீனிப் பைக்கற்றுக்களைத் தயாரிக்கலாம்?

……………………………………………………………………………………

70) "முப்பந்தைந்தாயிரத்து தொண்ணூற்று ஒன்பது" என்னும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

…………………………………………………………………………

71) இப்பெட்டியினுள் உள்ள எண்களுள் 9 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண் எது?

…………………………………………………………………………


| | |
|---|---|
| **399** | **578** |
| **451** | **675** |

72) சுதன் **5** ஈர்க்குத் துண்டுகளைப் பயன்படுத்தி உரோம எண்குறிகளில் எண் **8** இனை வகைக்குறித்:துக் காட்டினான். அதற்கேற்ப **20** இலும் குறைந்த ஓர் எண்ணை உரோம

எண்குறிகளில் வகைகுறிப்பதற்குச் சுதனுக்கு **7** ஈர்க்குத் துண்டுகள் தேவைப்பட்டன. அவ்வெண்ணை உரோமன் எண் குறிகளில் எழுதுக.

…………………………………..

**73)** கீழே காட்டப்பட்டுள்ள வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க திண்மங்கள் இரண்டும் யாவை?



**(i) ……………………………………**

**(ii) ……………………………………**

**74)** பிற்பகல் **1.15** இற்குத் தனது வீட்டிலிருந்து புறப்பட்ட பாலா பிற்பகல் **2.40** இற்கு நூலகத்தைச் சென்றடைந்தான்.

(i) வீட்டிலிருந்து நூலகத்திற்குச் செல்வதற்குப் பாலாவுக்கு எடுத்த நேரம் மணித்தியாலங்களிலும், நிமிடங்களிலும் எவ்வளவு?

மணித்தியாலம் ………………… நிமிடம் ………………………

(ii) பாலா நூலகத்தை அடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

**செயற்பாடு 01**


மாணவர்களை குழுவாக்கி உரையாடல் ஒன்றினை நடிக்க வழிப்படுத்துங்கள்

கதாபாத்திரங்கள் ˙- மாணவர்கள் , ஆசிரியர்கள்,

(உதயன் ,கஜன், சேகர், ஆசிரியர்)

**கொரோனாவால் பாதிக்கப்பட்ட சிறுவன்**






**இந்த யோசனைகளுடன் சேகர் பாடசாலைக்கு செல்கின்றான்.**



கஜன் :- அதோ சேகர் வருகின்ற

உதயன் :-ஆமாம் உள்ளே போய் விடுவோம்

ஏனைய நண்பர்கள் அவனோடு சேரக் கூடாது என்று அம்மா கூறியிருக்காங்க

கஜன் :- அப்படியா தனியா உட்கார கதிரையை போடுவோம் வா

ஆசிரியர் :- என்ன யாருக்கு தனியாக கதிரை போடுறீங்க?

அனைத்து மாணவர்கள் :- சேகருக்கு டீச்சர்

ஆசிரியர் :- ஏன் அவனுக்கு என்ன?

அனைத்து மாணவர்கள் :- அவனுக்கு கொரோனா டீச்சர்

ஆசிரியர் :- அப்படி சொல்லக்கூடாது அவர் மருந்து எடுத்து குணமாகிவிட்டான். அவரை உங்க ளுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்

அனைத்து மாணவர்கள் :- ஓகே டீச்சர் வாங்க சேகருக்கு குட் மோர்னிங் சொல்லுவோம். வாடா சேகர் குட்மோர்னிங் நல்லா இருக்கிறியா?

சேகர் :- ஆம் நல்லா இருக்கேன். நீங்கள் எல்லோரும் என்னுடன் கதைக்காமல் ஒதுங்கி விடுவீர்கள் என் நினைத்தேன் எல்லோரும் என்னுடன் முன்பு இருந்தது போலவே இருக்கிறீர்கள் நன்றிடா
சரி வாருங்கள் நாம் சேர்ந்து படிப்போம்.

சரிடா நான் கொரோணாவால் ரொம்ப பாதிக்கப்பட்டு விட்டேன். அதனால நம்மள பாதுகாத்து கொள்ள சுகாதா நடைமுறைகளை கடைப்பிடித்து சுகமாக வாழ்வோம்.

**நோயிலிருந்து பாதுகாப்ப பெற சுகாதார முறைகளை கையாளுங்கள்**


முககவகம் அணிதல்



கைகளை கழுவுதல்



சமூக இடைவெளி பேணுவோம்.




## Covid19 தடுப்பூசி வகைகள்



| | |
|---|---|
| பைசர் | - அமெரிக்கா |
| மாடரனா | - அமரிக்கா |
| சினோவாக்ஸ் | - சீனா |
| நோவாவாக்ஸ் | - அமெரிக்கா |
| ஸ்புட்னிக் | - ரசியா |
| கோவிசீல்ட் | - இங்கிலாந்து |
| கொவாக்சின் | - இந்தியா |
| அஸ்ராசெனகா | - இந்தியா |
| சினோபாம் | - சீனா |
| பாக்வேக்ஸ் | - சீனாவுடன் சேர்ந்து பாகிஸ்தான் |

**செயற்பாடு 02**

**கருப்பொருள் எமது வாழ்வு**

**வளங்கள் :- செயலட்டைகள் , இலக்கச் சுருள்கள், டிமைன்தாள்**

**செயற்பாடு I**

- பாடசாலையிலும் பொது இடங்களிலும் கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்க வழக்கங்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களை தொகைக்கேற்ப குழுக்களாக்கி செயலட்டைகளை வழங்குங்கள்
- 1- 10 வரை இலக்கங்களை எழுதி சுருட்டிக் கொள்ளுங்கள்.
- மேசையில் சுருட்டிய இலக்கங்களை குலுக்கிப் போடுங்கள்
- எழுமாறாக ஒரு மாணவனை எழுப்பி இலக்கச் சுருளை எடுக்கச் செய்யுங்கள்

| பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டிய பழக்க வழக்கங்கள் | பொது இடங்களில் கடைப்பிடிக்க வேண்டியப பழக்க வழக்கங்கள் |
|---|---|
| | |

- இலக்கத்தை சத்தமாக கூறியதும் அதற்குரிய செயற்பாட்டை செயலட்டையில் இருந்து கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்
- டிமைன் தாளில் இவ்வாறு எழுதி காட்சிப்படுத்துங்கள்

- மாணவர் வாசித்த விடயத்தை உரிய இடத்தினுள் எழுத வழிப்படுத்துங்கள்.

**செயலட்டை**

| |
|---|
| 05. வகுப்பறையையும் சுற்றுப்புற சூழலையும் சுத்தமாக வைத்திருத்தல். |
| 04. விபத்துக்கள் ஏற்படும் போது முதலுதவி அளித்தல் |
| 03. ஏழை எளியோருக்கு உதவுதல். |
| 02. வகுப்பறையை சுத்தமாக வைத்திருத்தல். |
| 01. பாடசாலை ஆரம்பமாகும் முன்பே பாடசாலைக்குச் செல்லுதல் |
| 06. விளையாட்டுகளில் வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்ளல் |
| 07. பார்வை அற்றோருக்கு உதவுதல். |
| 08. பாடசாலை சொத்துக்களை பாதுகாத்தல் |
| 09. சீருடை அணிந்து செல்லல். |
| 10. அங்கவீனர்களுக்கு உதவுதல் |

செயற்பாட்டை செய்து முடித்த பின்னர் வினாக்களை வழங்கி திருத்தம் செய்யுங்கள்

செயற்பாடு 03


வளங்கள் :- சூரிய நமஸ்காரம் படங்கள்

**சூரிய நமஸ்காரத்தை வாழ்க்கைக்குப் பழக்கமாக்கி கொள்ளுங்கள்.**


- மாணவர்களை வெளியே அழைத்துச் சென்று சமூக இடைவெளியைப் பேணி தாளத்துடன் சூரிய நமஸ்காரம் செய்ய வழிப்படுத்துங்கள்.

ஒரு செயற்பாட்டிலிருந்து இன்னொரு செயற்பாட்டிற்கு மாறுவதற்கு 1,2,3,4 எனக்


01




02




03




04




05




06




07




07




08




09



10




11



செயற்பாடு 04

உடல், உள சுகம் பெறுவோம்.

மாணவர்களை வெளியில் அழைத்துச் சென்று செயற்பாடுகள் ஒவ்வொன்றாகக் கூறி செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள் ( விரைவாக கூறுவதை தவிர்க்கலாம்)




**உடலை தளர்த்துதல்**

கதிரையில் அமர்ந்து கண்களை மூடிக்கொள்ளுங்கள் உடல், கை / கால்கள், தலை, மார்பு, நெஞ்வு தளர்த்தி கொள்ளுங்கள்.

**உள்ளத்தை தளர்த்துதல்**

சுற்றுபுற சூழல் ஒலிகள், வகுப்பறை ஒலிகள் இதயதுடிப்பு ஒலிகள், பறவைகளின் ஒலிகள், அண்மை ஒலிகளை செவிமடுங்கள்.

**மனவுறுதி திடசித்தம்**

உள அமைதியை குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் பாடசாலையில் உள்ளோருடனும் பகிர்வேன். நாட்டிற்கும், வீட்டிற்கும், பாடசாலைக்கும் ஒளியாவேன்.

**உதிப்பு**

நான் பெற்ற அமைதியை வீட்டாருக்கும், நண்பர்களுக்கும் பகிர்ந்தளிக்க முடியும் முழு உலகையும் என்னால் வெற்றிக் கொள்ள முடியும்.


- இப்போது உள் மூச்சு வாங்குங்கள்
- வெளிமூச்சை விடுங்கள்
- உள்ளத்தை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள்.
- கண்களை மெதுவாகக் திறவுங்கள்.
- வகுப்பறைக்குச் செல்லுங்கள் கல்வி கற்க ஆயத்தமாகுங்கள்.

**செயற்பாடு 05**

## பொதுச் சொத்துக்களை பாதுகாப்போம்.

**வளங்கள் :- பெயர்பலகை , பந்து**

- மாணவர்களை தொகைக்கேற்ப இரு குழுக்கள் ஆக்குங்கள்.
- இரு குழுக்களுக்கும் பந்துகளை வழங்குங்கள்.
- படத்திலுள்ளவாறு மாணவர்களை நிறுத்துங்கள்.




- ➢ வட்டத்தில் இருப்பவர் முதலாம் மாணவனுக்கு பந்தை உருட்டி விட அவர் பந்தை பிடித்து 2ம் மாணவனுக்கும், 2ம் மாணவன் 3ம் மாணவனுக்கும் உருட்டி விட அறிவுறுத்தல் வழங்குங்கள் ( தொடர்ச்சியாக செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்)
- ➢ பந்து கைக்கு கிடைத்தவுடன் பெயர் பலகையை வாசித்து அதன் பயன்களை சத்தமாக கூற வழிப்படுத்தங்கள்.
- ➢ பந்தை பெயர் பலகையில் விழாமல் உருட்ட வேண்டும் .
- ➢ பெயர்பலகையில் விழுமாயின் மீண்டும் முதலில் இருந்து உருட்ட வேண்டும்.















பொதுச் சொத்துக்களை பாது

**கணிப்பீடு 01**

**சரியான விடையைத் தெரிந்து கோடிடுவோம்**

**01. மனதை ஒரு நிலைப்பத்தும் செயற்பாட்டில் முதலில் செய்ய வேண்டிய செயற்பாடு**

I. திடசித்தம் II. பிராத்தனை III. உடலை தளர்த்துதல்

**02. மனதை ஒரு நிலைப்பத்தும் செயற்பாட்டில் முதலில் செய்ய வேண்டிய செயற்பாடு**


I. 3 II. 4 III. 5

**03. கொரோனா வைரஸ் பரவி உள்ளதா? என்பதை சோதிக்க பயன்படுத்தும் சோதனை முறை**

I. P.C.R II. I.C.R III. P.**L.O**

**04. சூரிய நமஸ்காரத்தில் 7வது படிமுறையை காட்டும் படம் எது**

I. 

II. 

III. 

**05. சுகாதார பழக்க வழக்கங்களில் மிக முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டிய பழக்க வழக்கமாக அமைவது**

I. தொப்பி அணிந்து செல்லல்
II. குளித்து புதிய ஆடை அணிந்திருத்தல்
III. முகக்கவசம் அணிந்துக் கொள்ளல்.

**06. திடசித்தம் என்பது**

I. உள்ளம் அமைதியுறுவதை மரஞ் செடிகொடிகள் உணர்த்த லாகும்.
II. உள அமைதியை பகிர்ந்துக்கொள்ளல்
III. ஒலிகளை செவிமடுத்தல்.

**07. சீனாவிலிருந்து அண்மைக்காலத்தில் பெற்றுக்கொண்ட தடுப்பூசி**

I. மாடரனா II. சினோபாம் III. ஸ்புட்னி

**08. பின்வருவனவற்றுள் ஒன்றில் தவறாக நடந்தக் கொள்ளும் சந்தர்பம் யாது ?**

I. அமைதியை பேணுதல்
II. சுவல்களில் எழுதுதல்
III. பெரியோருக்கு உதவி செய்தல்

**09. வீதிகளில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய பழக்க வழக்கமாக அமைவது**

I. வீதிகளில் அங்கும் இங்கும் ஓடுதல்
II. வீதிகளில் நின்று விளையாடுதல்
III. பாதசாரி கடவைகளில் செல்லுதல்


**10. காலையில் சூரிய நமஸ்காரம் செய்வதால் கிடைக்கும் நன்மை**

I. உடல் உறுப்புக்களின் இயக்கம் சீராக்கப்படும்
II. விற்றமின் C யை பெற்றுக்கொள்ளமுடியும்
III. உடல் சோர்வடையும்

செயற்பாடு 06

புளியம் ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள்.

கீழே தரப்பட்டுள்ள ஏணியின் படிகளில் தள்ளிச் சென்று இடமிருந்து வலமாக உள்ள ஆங்கில சொற்களை கற்றுக்கொள்ள வழிபடுத்தங்கள்.




கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்



01. I am a ..........................................................................
I Work in a ......................................................................



02. I am a ..........................................................................
I Work in a ......................................................................



03. I am a ..........................................................................
I Work in a ......................................................................




03. I am a ..........................................................................
I Work in a ......................................................................

- சிறிய கடதாசியை உருட்டி கீழ் உள்ள வட்டத்தில் வைத்து பானக் குழாய் மூலம் மெதுவாக ஊத வழிகாட்டுங்கள்.
- கடதாசி நிற்கும் இடத்தில் உள்ள சிங்கள சொல்லுக்குரிய தமிழ் சொல்லை எழுதி வாசிக்க வழிகாட்டுங்கள் வாசியுங்கள்.

| **சிங்கள சொல்** | | **தமிழ் சொல்** |
|---|---|---|
| பாசல | | |
| தபால் கார்யாலய | | |
| ரோகல | | |
| தும்பிரிஸ்தானய | | |
| பஸ் நவத்தம்பொல | | |

**செயற்பாடு 07**
**நாம் இலங்கையர்**
பாடவேளை 1

- இலங்கைப்படம் ஒன்றை டிமைன் தாளில் வரைந்துக் கொள்ளுங்கள்.
- மாகாணங்களினதும், நகரங்களினதும் பெயரை எழுதி ஒரு பெட்டிக்குள் போட்டுக் கொள்ளுங்கள்.
- மாணவர்களை சமூக இடைவெளியைப் பேணி வெளியே அழைத்துச் சென்று வட்டமாக நிறுத்துங்கள்.
- வரையப்பட்ட டிமைன் தாளை நடுவில் வையுங்கள்
- எழுமாறாக மாணவர்களை அழைத்து இரு பெட்டிகளிலும் உள்ள மாகாணங்களினதும், நகரங்களினதும் அட்டைகளை எடுக்கச் செய்யுங்கள்.
- வைக்கப்பட்ட டிமைன் தாளில் உரிய இடத்தில் வைக்க வழிகாட்டுங்கள்.
- மாகாணங்கள், நகரங்கள் என்பவற்றை மாணவர்களுடன் கலந்துரையாடி குறித்துக்கொள்ள வழிகாட்டுங்கள்.




**இலங்கையின் மாகாணங்களும் அதன் தலைநகரங்களும்**

- வட மாகாணம் - யாழ்ப்பாணம்
- மத்திய மாகாணம் - கண்டி
- வடமேல் மாகாணம் - குருநாகல்
- வட மத்திய மாகாணம் - அநுராதபுரம்
- மேல் மாகாணம் - கொழும்பு
- சப்ரகமுவ மாகாணம் - இரத்தினபுரி
- ஊவா மாகாணம் - பதுளை
- கிழக்கு மாகாணம் - திருகோணமலை
- தென் மாகாணம் - காலி

இலங்கையின் பிரசித்தி பெற்ற இடங்களை மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வழிப்படுத்தங்கள்.

**இலங்கையின் பிரசித்தி பெற்ற இடங்கள்**

- முகமுடி - அம்பலாங்கொடை
- பனை - யாழ்ப்பாணம்
- மங்குஸ்தான் - களுத்துறை
- ரம்புட்டான் - மல்வானை
- உப்பு - அம்பாந்தோட்டை, புத்தளம்
- சீமெந்து - காங்கேசன்துறை
- கடதாசி - வாழைச்சேனை

- சீனி - கந்தளாய்
- ஒட்டுப்பலகை - கிந்தொட்டை
- இறப்பர் - கேகாலை

## எமது நாடு

- நான்கு புறமும் கடலால் சூழப்பட்டது. - தீவு
- சுதந்திர தனம - 1948 பெப்ரவரி 04
- குடியரசு தினம் - 1972
- தலை நகரம் - ஸ்ரீ ஜயவர்தன் புர
- அமைந்துள்ள கண்டம் - ஆசியா
- நீளமான ஆறு - மகாவலி கங்கை
- தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்
- இயற்கை துறைமுகம் - திருகோணமலை
- முதலில் அமைக்கப்பட்ட குளம் - அபயவாவி
- புகழ் பெற்ற ஓவியம் - சீகிரியா குகை ஓவியம்
- உயரமான மலை - பீதுருதாலகால மலை
- தேசிய பறவை - காட்டுக் கோழி
- தேசிய மலர் - அல்லி.ஃ.நீலோற்பலம்
- தேசிய மரம் - நாக மரம்
- உயரமான நீர்வீழ்ச்சி - பம்பரகந்த
- இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் - ஆனந்த சமரக்கோன்
- தேசிய கீதத்திலுள்ள வரிகள் - 29
- தேசிய கீதத்தை மொழி பெயர்த்தவர் - மு.நல்லத்தம்பி புலவவர்

**செயற்பாடு 08**

- எழுமாறாக மாணவர்களை தெரிவு செய்து நான்கு இன மக்களும் அணியும் உடைகளை உடுத்தி நிற்கச் செய்யுங்கள்.



- இலங்கைப்படத்தைச் சுற்றி நின்று தேசிய கீதத்தினை பாட வழிகாட்டுங்கள்.
- தேசிய கீதம் பாடும் போது நிற்கும் மெய் நிலைகளை கூறுங்கள்



**செயற்பாடு 09**

- ஐந்து இன மக்கள் உடைகளை அணிந்து மாணவர்களை இடைவெளி விட்டு ஆங்காங்கே நிறுத்துங்கள்.
- இலங்கை தொடர்பான தகவல்களை வழங்கி விளக்கமளிக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களை தொகைக்கேற்ப குழுக்களாக்கிக் கொள்ளுங்கள்.
- ஆசிரியர் கை தட்டிய உடன் ஒவ்வொரு இனத்தவர்களின் முன்னால் சென்று நிற்க அறிவுறுத்தலை வழங்குங்கள்
- அங்கு குழு தலைவராக இருப்பவர் இலங்கை தொடர்பாக விளக்கமளிக்க வழிகாட்டுங்கள். ( போதியளவு நேரத்தை வழங்குங்கள்)
- மீண்டும் கையை தட்டும் போது குழுக்களை மாறச் செய்யுங்கள்.( இவ்வாறு தொடர்ச்சியாய ஐந்து குழுக்களும் விளக்கத்தைப்பெற்ற பின் குழுத்தலைவராக இருந்தவர்களுக்கு இச் செயற்பாட்டை வழங்கி விளக்கம் பெறச் செய்யுங்கள்

| | | |
|---|---|---|
| பேசும் மொழி | :- | தமிழ் |
| சமயம் | :- | இந்து, |
| வழிபாட்டுத்தலம் | :- | கோயில் |
| புனித நூல் | :- | வேதாகமங்கள், பகவத் கீதை |
| விழாக்கள் | :- | தைப்பொங்கல், நவராத்திரி, தீபாவளி, சித்திரைபுதுவருடம், மகாசிவராத்திரி |
| நடனம் | :- | பரதம் |





| | | |
|---|---|---|
| பேசும் மொழி | :- | சிங்களம் |
| சமயம் | :- | பௌத்தம் / கிறிஸ்தவம் / கத்தோலிக்கம் |
| வழிபாட்டுத்தலம் | :- | விகாரை |
| புனித நூல் | :- | திரிபீடகம் |
| விழாக்கள் | :- | வெசாக் பொசன், சித்திரைபுதுவருடம், |
| நடனம் | :- | கண்டிய நடனம் |





| | | |
|---|---|---|
| பேசும் மொழி | :- | ஆங்கிலம் |
| சமயம் | :- | கிறிஸ்தவர் |
| வழிபாட்டுத்தலம் | :- | தேவாலயம் |
| புனித நூல் | :- | பைபிள் |
| விழாக் | | |

| | | |
|---|---|---|
| பேசும் மொழி | :- | அரபு |
| சமயம் | :- | இஸ்லாம் |
| வழிபாட்டுத்தலம் | :- | பள்ளி வாசல் |
| புனித நூல் | :- | திருக்குரான் |
| விழாக்கள் | :- | ஹஜ் பெருநாள், றமழான் |

| | | |
|---|---|---|
| பேசும் மொழி | :- | வேடுவமொழி / சிங்களம் / தமிழ் |
| சமயம் | :- | - |
| வழிபாட்டுத்தலம் | :- | இயற்கை வழிபாடு ( சூரியன், சந்திரன் |




## நாட்டின் நற்பெயருக்காக பணியாற்றியவர்கள்

| பெயர் | பிறப்பு | பிறந்த இடம் | கற்ற மொழியும் கல்வி கற்ற இடமும் | எழுதிய நூல் | மறைவு |
|---|---|---|---|---|---|
| கலாநிதி ஆனந்த குமார சுவாமி | 1977 ஆகஸ்ட் 22ம் திகதி | கொள்ளுப்பிட்டி கொழும்பு | தமிழ்,ஆங்கிலம்,பிரஞ்சு, ஜேர்மன், லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம் ,பாளி<br>லண்டன் வைக்லி.்.ப் | 1. இலங்கையின் மலைகளும் காரீயமும் பருவ இதழ்<br>2. சிலோன் நவுனல ரிவீவ் சஞ்சிகை (பிரதம ஆசிரியர்)<br>3. மத்தியக்கால சிங்கள கதை<br>4. இந்தியா ,இந்தோனேசியா கலை வரலாறு)<br>5. தேசிய எதிர்ப்பார்ப்புக்கள் | 1947 செப்டெம்பர் 09 ஆமெரிக்க பொஸ்டன் நகரம். |
| கலாநிதி ரீ.பி ஐயா | 1890.01.01 | கலகெதர பிரதேசம் கண்டி | லத்தீன் கிரேக்கம்<br>• புதவி<br>ஆசிரியர்<br>அதிபர்<br>கொட்டாஞ்சேனை சென் போல்ஸ் சென் தோமஸ் கல்லூரி<br>• தேசியக்கொடி கமிட்டி<br>தேசிய கீதக் கமிட்டி அங்கத்தவர். | | 1960.05.03 மக்கா நகர் |
| கலாநிதி சி டபுல்யு கன்னங்கர (இலவசக் கல்வியின் தங்தை) | 1894.10.18 | பாரத தேசம் | அம்பலாங்கொடை வெஸ்லியன் கல்லூரி காலிரிச்மண்ட் கல்லூரி<br>• புதவி<br>1931-1946<br>இலங்கை கல்வி அமைச்சர்<br>இலங்கையின் கல்விக்கோல மறுசீரமைப்பு. | | |
| ஆதர் சி கிளாக் (விஞ்ஞானியும் எழுத்தாளரும். | 1917.12.16 | மயின் ஹெச் நகரம் | வயர்லெஸ் வெர்ல்ட் சஞ்சிகை<br>• மொரட்டுவ பல்கலைக்கழக வேந்தர்<br>அரச வானியலாளர் கழக அங்கத்தவர்<br>• 38 பட்டமும் வருதும் பெற்றவர் | | 2008.03.19 இலங்கையில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வண.எஸ் மஹிந்த தேரர் | | திபெத் | பதவி<br>ஆசிரியர்<br>பிக்குகள் சபையின் பதிவாளர்<br>லங்கா மாதர, சுதந்திர மந்திரம், தேசிய தாலாட்டு,ஸ்ரீபாத | | 1951.03.14 |

**இலங்கையின் பிரதான ஆறுகள் கடலுடன் கலக்கும் இடங்கள்**

- மகாவலி கங்கை - திருகோணமலை
- மாணிக்க கங்கை - யால
- ஜின் கங்கை - காலி
- களு கங்கை - களுத்துறை
- களனி கங்கை - கொழும்பு
- கல்லோயா - மட்டக்களப்பு
- வளவ கங்கை - அம்பாந்தோட்டை
- கும்புக்கன் ஓயா - குமண




பண்டுகாபயன்

**இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.**

| நகரம், மாவட்டம் | புகழ் பெற்றதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையும் |
|---|---|
| கண்டி | தலதா மாளிகை, பேராதெனிய தாவரவியற் பூங்கா, எம்பக்க தேவாலயம் |
| யாழ்ப்பாணம் | நல்லூர் கோயில்,ஊர்காவற்றுறை கடற்கோட்டை, நாகபூசணியம்மன் ஆலயம், யாழ்ப்பாண கோட்டை, மந்திர் மனை, ஜமுனா ஏரி |
| அநுராதபுரம் | புனித வெள்ளரசுமரம், மிகிந்தலை, அபயகிரி,ருவன்வெலிசாய, ஜேதவனாராமய, மகா விகாரை |
| கம்பளை | லங்காதிலக விகாரை, கடலாதெனிய விகாரை |
| குருநாகல் | யாப்பகூவ |
| பொலன்னறுவை | சிவன் கோயில், லங்காதிலக விகாரை |
| காலி | காலி கோட்டை |

சிகிரிய குன்றும் குகை ஓவியங்களும்







காலி கோட்டை



யாழ்ப்பாண கோட்டை




**தாமரைத் தடாகம்**





**செயற்பாடு 10**

பின்வரும் ஆக்கங்களை செயற்பாட்டு ரீதியாக ஒவ்வொன்றாகச் செய்து காட்சிப்படுத்தி விளக்கமளியுங்கள்.


ஆக்கங்கள்

- கொலாஜ் → கடதாசிகளை
- அல்பனா → விதைகளை
- அச்சுப்பதித்தல் → தாவரங்களின்
- ஒரிகாமி → கடதாசிகளை மடித்து

**செயற்பாடு – 11**

**புள்ளிக்கோடுகளை இணைத்து சேவை வழங்கும் நிறுவனங்களை கற்க வழிப்படுத்துங்கள்.**

**சேவைகளும் வழங்கும் நிறுவனங்களும்.**




**செயற்பாடு 11**

- **காட்சிப்படுத்தப்பட்டுள்ள தேசியக்கொடியை பார்த்து கொடுக்கப்பட்டுள்ள தேசிய கொடிக்கு நிறந்தீட்ட வழிகாட்டுங்கள்.**

தேசியக் கொடி



**புள்ளிக்கோடுகளை இணைத்து நிறங்களின் விளக்கத்தை பெற வழிப்படுத்துங்கள்.**

1. சிவப்பு நிற பிண்ணணியில் மஞ்சள் நிற வாளேந்திய சிங்கம்
2. செம்மஞ்சள் நிறம்
3. பச்சை நிறம்
4. முழுக்கொடியையும் சுற்றி காணப்படும் மஞ்சள் நிறம்
5. நான்கு அரச இலைகள்
6. இனங்களின் ஒற்றுமை கொடியின் முழுமைப்பாடு

- முஸ்லீம் மக்கள்
- சிங்கள மக்கள்
- தமிழ் மக்கள்
- இரக்கம், காருண்யம், திருப்தி, பற்றின்மை

**செயற்பாடு 12**

- அரச இலட்சினை பகுதிகள் புலப்படுமாறு படத்தை காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்களை தொகைக்கேற்ப குழுக்களாக்கி அரச இலட்சிணை படத்தினை துண்டங்களாக்கி பொருத்துவதற்கு சந்தரப்பம் அளியுங்கள்.
- குறிப்பிட்ட நேரத்தை வழங்கி பகுதிகளை குறித்துக்காட்டி விளக்கமளிக்கச் செய்யுங்கள்.
- பயிற்சி கொப்பியில் வரைந்து பகுதிகளை குறிக்க வழிப்படுத்துங்கள்.



- நிறை குடம் - சௌபாக்கியம்
- நெற்கதிர்- தன்னிறைவு, செழிப்பு
- பூவிதழ்,வாளேந்திய சிங்கம் - நாடும் கட்டுப்பாடான மக்களும்
- தர்ம சக்கரம் - தார்மீகம்
- சூரியன் சந்திரன் - நிலைத்திருப்பு

**இலங்கையின் மறு பெயர்கள்**

- ஆரியர்கள் - தம்பபண்ணி
- ஒல்லாந்தர் - சிலான்
- போர்த்துக்கேயர் - செயிலான்
- ஆங்கிலேயர் - சிலோன்
- அராபியர் - செரண்டிப்

**இலங்கையில் விமான நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள்.**

- கட்டுநாயக்க – கொழும்பு
- பலாலி - யாழ்ப்பாணம்
- இரத்மலானை - கொழும்பு
- மத்தள – அம்பாந்தோட்டை

**கணிப்பீடு 02**

**மாவட்டங்கள் தொடர்பான தகவல்களை தொடர்புபடுத்துவோம்**

1. மிகவும் குளிர் கூடிய மாவட்டம்
2. மிகப் பெரிய மாவட்டம்
3. அதிக மாவட்டங்கள் அமைந்த மாகாணம்
4. மிகச் சிறிய மாவட்டம்
5. சனத்தொகை குறைந்த மாவட்டம்
6. சனத்தொகை கூடிய மாவட்டம்

7. அதிக மழை வீழ்ச்சியைக் கொண்ட பிரதேசம்

8. மிகவும் குளிர் நிறைந்த பிரதேசம். -----------------------------------

9. மிகவும் பெரிய மாகாணம்.

| | | |
|---|---|---|
| வடமாகாணம் | கொழும்பு | நுவரெலியா |
| வடமத்திய மாகாணம் | கொழும்பு | கந்தப்பொல |
| அநுராதபுரம் | முல்லைத்தீவு | வட்டவளை |

வினாக்களுக்கு விடை எழுதுங்கள்

01. வடமத்திய மாகணாணத்தின் தலைநகரம் ..................................................................

02. இலங்கையின் நீளமான நதி ..................................................................

03. பௌத்தர்களின் புனித நூல்..................................................................

04. இலங்கையின் தேசிய பறவை ..................................................................

05. தேசிய கொடியை வடிவமைத்தவர் ..................................................................

06. எமது நாடு சுதந்திரமடைந்த ஆண்டு ..................................................................

07. நீர் வழங்கும் திணைக்களம் ..................................................................

08. தேசிய கொடி ஏற்றப்படும் சந்தரப்பங்கள் ..................................................................


**செயற்பாடு 13**

வளங்கள் :- தாவர பகுதிகளின் பெயர் அட்டைகளும், பயன்களின் பெயரட்டைகளும், கூடை

தாவரங்கள் வளர்ச்சிக்கு அவசியமானவை

சூரிய ஒளி

வளி



வளமான மண்

நீர்

- மாணவர்களை இரு குழுக்களாக்கி கொள்ளுங்கள்.
- தாவரத்தின் பயன்களையும் , பகுதிகளையும் அட்டையில் எழுதி இரண்டு கூடையில் போட்டுக் கொள்ளுங்கள்.
- மாணவர்களை இரு வரிசையில் நிறுத்துங்கள்.
- கையை தட்டியவுடன் தாவரப்பகுதிகளில் ஒன்றை எடுத்துக் கூறி ஒட்ட வழிப்படுத்துங்கள்.
- 2ம் குழுவிலுள்ள மாணவன் அதன் பயன்பாட்டை கூடையிலிருந்து எடுத்துச் சென்று காட்சிப்படுத்திய தாவரப்பகுதியில் ஒட்ட வழிப்படுத்துங்கள்.

  உதாரணம் :- வேர் நீரை உறிஞ்சுதல்.

| | |
|---|---|
| தண்டு | நீரை எல்லா பாகங்களுக்கும் கொண்ட செல்லுதல் |
| இலை | உணவு தயாரித்தல் |
| வேர் | நீரை உறிஞ்சுதல், தாவரத்தை நிலையாக வைத்திருத்தல் |
| காய் | உணவுக்காக பயன்படும். |


பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளிகளை நிரப்புக

01. This is.......................... Plant . ( is, are )

02. These ...................... Flowers (is, are)

படத்திற்குரிய பெயரை ஆங்கிலத்தில் எழுதுங்கள்







................................................... ................................................... ...................................

**செயற்பாடு 14**

தேவையான பொருட்கள்:- மரகைப்பிடியுள்ள உலோகக்கரண்டி , மெழுகுவர்த்தி, மை நிரப்பி, நீர்



- மெழுகு வர்த்தியை எரியவிட்டு கரண்டியை சூடாக்க வழிப்படுத்துங்கள்.
- பின் மை நிரப்பி மூலம் **நீர்துளி** ஒன்றை கரண்டியின் மீது விழச் செய்து நிகழ்பவற்றை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
- சூடாக்கிய கரண்டியின் மீது **மை நிரப்பி மூலம் மையை** விடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- இரண்டு செயற்பாடுகளிலும் நிகழ்ந்த விடயங்களை கூறச் செய்யுங்கள்.

| இச் செயற்பாட்டின் மூலம் நாம் அறிந்துக் கொள்பவை |
| --- |
| ➢ நீரை விடும் போது ஸ் என்ற சத்தத்துடன் நீர் ஆவியாகி சென்றது.<br>➢ ஸ் என்ற சத்தத்துடன் மை ஆவியாகி மையின் நிறம் எஞ்சி இருக்கும். |

**செயற்பாடுகளை செய்யும் போது பாதுகாப்பை கவனத்தில் கொள்க**

**செயற்பாடு 15**

**தேவையான பொருட்கள் :- நிறமூட்டிகள், பாத்திரம், நீர், டிசு தாள்**

- சம அளவான ஊடு காட்டும் தன்மை உள்ள மூன்று பாத்திரங்களை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- உணவு வகைச் சாயத்தை பயன்படுத்தி நீலம், சிவப்பு, மஞ்சள் நிறம் சேர்த்து நிறமூட்டிய நீரின் சம அளவுகளை தனித்தனியே மூன்று பாத்திரங்களிலும் இடுவதற்கு வழிகாட்டுங்கள்.
- படத்தில் காட்டியுள்ளவாறு பாத்திரங்களை அருகருகே வரிசையாக வைத்த வெள்ளை நிறத்தாளை இடுவதற்கு வழிகாட்டுங்கள்




- நிறமூட்டிய நீர் செல்லும் விதம் நிறங்கள் ஒன்றுடன் ஒன்று கலக்கும் விதம் , புதிய நிறங்கள் தோன்றும் விதம் பற்றி அவதானித்து கூற வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 16**


**ஏப்ரன் தயாரித்தல்**

தேவையான வளங்கள் :- ஊசி , நூல் , சதுர வடிவமான துணி, நாடா , கத்தரிக்கோல்

- பிள்ளைகளுக்கு சதுரவடிவமான துணிகளை வழங்குங்கள்.
- கரையை தைக்க வழிப்படுத்தங்கள்
- இடுப்பின் சுற்றளவை அளந்து அதனை விட 30Cm இலும் கூடுதலான நீளப் புடவைத் துண்டின் கீலமாக வெட்டிக் கொள்ளுங்கள்.




- உடலின் மேற்பகுதிக்கு பொருத்தமான அளவு புடவைத்துண்டை கொடுத்து கரையை, சங்கிலிதையல், கம்பளித்தையல், மூலம் தைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.




- மேற்பகுதியை கட்டுவதற்கு போதுமான நீண்ட நாடாக்களை பொருத்துவதற்கு வழிப்படுத்துங்கள்


- பின்னர் இரண்டு புடவை துண்டுகளையும் ஒன்றாக சேர்த்த பொருத்த வழிப்படுத்துங்கள்.




துணிகளை இணைக்க – நூலோட்டித் தையல்
ஏப்ரனை அலங்கரிக்க – கம்பளித்தையல் , சங்கிலிதையல்

**இலங்கையிலுள்ள மாகாணங்களை ஆங்கிலத்தில் அறிவோம்.**




**தோற்கருவிகள்**




**நரம்புக்கருவிகள்**



**துளைக்கருவிகள்**

**கஞ்சக்கருவிகள்**

**<u>பிராணிகளின் முட்டையின் நிறமும் முட்டையிடும் இடமும்</u>**

| பிராணிகள் | முட்டையின் நிறம் | முட்டையிடும் இடம் |
|---|---|---|
| பல்லி | வெள்ளை | சுவர், கூரையிலுள்ள துவாரம் |
| காகம் | இளம் பச்சை | கூடு |
| குயில் | இளம் பச்சை | காகத்தின் கூட்டில் |
| முதலை | வெள்ளை | ஆறு, குளக் கரைகளில் மண்ணைத் தோண்டி |
| கிளி | பச்சை சார்ந்த இள நிறம் | மரப்பொந்தில் |
| கொக்கு | இள நீலம் | கூடு |
| தவளை | கருப்பு | நீரினுள் |
| ஆமை | வெள்ளை | ஆறு, குளக்கரை ஓரங்களில் |
| எறும்பு | இளமஞ்சள் | புற்றில் |
| நத்தை | இளமஞ்சள் | ஈரலிப்பான இடங்களில் |

**இரண்டாம் தேசிய மொழி**

| | |
|---|---|
| மம – நான் | நே - இல்லை |
| ஒப – நீங்கள் | ஒவ் - ஆம் |
| மட்ட – எனக்கு | கவுத – யார் |
| ஒபட்ட – உங்களுக்கு | இதிரியென்/இதிரியட்ட- முன்னால் |
| மகே – எனது | பிட்டுபச, பிட்டுபசின், பிட்டுபசட – பின்னால் |
| ஒபே – உங்கள் | |
| அ(ப்)பி – நாங்கள் | |

**நபர்களை அறிவோம்**

| | |
|---|---|
| விதுஹல்பதி – அதிபர் | மெஹே, மெத்தன, மெதனட்ட – இங்கே |
| குருவரயா - ஆசிரியர் | எஹே, அத்தன, அத்தனட்ட, அத்தனின் – அங்கே |
| குருவரிய - ஆசிரியை | |
| ஷிஷ்யா - மாணவன் | |
| ஷிஷ்யாவா - மாணவி | |
| யெஹலிய - நண்பி | |
| யஹலுவா - நண்பன் | |

**வினைச்சொற்கள்**

1. பொன்ன - குடி/குடியுங்கள்
2. கன்ன - சாப்பிடுங்கள்
3. சோதன்ன - கழுவுங்கள்
4. அரின்ன - திறவுங்கள்
5. என்ன - வாருங்கள்
6. யன்ன - போங்கள்
7. இன்னவா - இருக்கிறார்
8. கியன்ன - வாசியுங்கள்
9. அல்லன்ன - பிடியுங்கள்
10. லியன்ன - எழுதுங்கள்

**வினாச்சொற்கள்**

ஓனத? - வேண்டுமா?
கவுத? - யார்?
கொஹேந்த? - எங்கே?
எனவத? - வருவாரா?
யனவத? - போகிறீர்களா?
கீயத? - எத்தனை?
மொக்கத? - என்ன?
கீதெனெக்? - எத்தனைப்பேர?

## இடஅமைவுச் சொற்கள்

உட/உடட்ட/உடின் - மேலே

யட்ட/யடட்ட/யடின்/பிமின்/பிமட - கீழே

எத்துல/எத்துலட்ட/எத்துலென் - உள்ளே

எலியே/எலியட்ட/எலியென் - வெளியே

| ஒருமைப் பெயர்கள் | பன்மைப் பெயர்கள் |
|---|---|
| அம்மா | அம்மாலா |
| அக்கா | அக்காலா |
| நங்கி | நங்கிலா |
| அய்யா | அய்யாலா |
| சீயா | சீயாலா |
| ஆச்சி | ஆச்சிலா |

சந்துதா

அங்காருவாதா

பதாதா

பிரஹஸ்பதிந்தா

சிக்குராதா


செனசுராதா


இரிதா

**சரியான தமிழ் சொல்லை இணைப்போம்**

பல்ல
எக்க
விஸ்
பத்
அரலி

**படத்திற்குரிய சிங்கள சொல்லை தமிழில் எழுதுக**



**சிங்கள வாக்கியங்களுக்குரிய தமிழ் கருத்தை எழுதுக.**

1. ஒபகே நம குமக்த?..............................................................................................................
2. ஒபகே பாசல குமக்த?.........................................................................................................
3. ஒபகே வயச கீயத?.............................................................................................................
4. மட்ட பேன ஓனே……………………………………………………………
5. மட்ட வத்துர எப்பா…………………………………………………………
6. வெலாவ கீயத?...................................................................................................................
7. ஒபகே கம கொஹெத?.........................................................................................................
8. பொல மெஹே………………………………………………………………
9. அங்காருவாதா நெந்தா எனவா…………………………………………………
10. ககுல சோதன்ன……………………………………………………………